# ஸ்ரீ குமர குருபரர்

18666




ஐப்பசி 1 (18—10—82)
தொகுதி 5 பகுதி 1

உ

சிவ-சிவ

# 'ஸ்ரீ குமரகுருபரர்'

கயிலைமாமுனிவர்

## ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

அருளாணையின் வண்ணம்

வெளிவரும் சமய - இலக்கியத் திங்கள் இதழ்


**சிறப்பாசிரியர்.**

பேராசிரியர்
திரு. அ. ச. ஞானசம்பந்தன், M. A., சென்னை-83

**ஆசிரியர் குழு:-**

திரு. மு. அருணாசலம், M. A., திருச்சிற்றம்பலம்
திரு. கா. ம. வேங்கடராமையா, M. A., தஞ்சை
மகாவித்துவான் திரு. ச. தண்டபாணி தேசிகர், மதுரை
மகாவித்துவான்
திரு. சி. அருணைவடிவேல் முதலியார், அண்ணாமலை நகர்
திரு. க. வச்சிரவேல் முதலியார், B. A., L. T., மதுரை
புலவர் திரு. கீரன், லால்குடி
டாக்டர் திரு. டி. பி. சித்தலிங்கையா, M. A. Ph.D., மதுரை
திரு. கு. சுந்தரமூர்த்தி, M. A., திருப்பனந்தாள்
திரு. பொ. முத்தரசு M. A., ஸ்ரீவைகுண்டம்


அட்டையில்:

ஸ்ரீ மெய்கண்டதேவர்
திருவுருவம்

பூங்கொன்றைக் கண்ணியான் பொன்மன் றிறைஞ்சிடுக
ஆங்கொன்றைக் கண்ணி யவர்.



# அருள் பழுத்த கனிச் சுவை

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து 21-ஆவது அதிபர்

**கயிலைமாமுனிவர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி**

**முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள்**

**அவர்கள்**

உணரச் சக்தி உள்ளவரிடத்தில் உரிமையுள்ளவர் உணர்ச்சிகரமாக உரைக்கிறார்.

குழந்தை அடம்பிடிக்கும். தாய் கோபித்துக் கொள்வாள். கோபித்துக் கொள்ளும் உரிமையை மட்டும் எடுத்துக் கொள்வது தாயின் லட்சணமாகாது. மறு விநாடியே கோபத்தை ஆற்றிக் கொண்டு அவதிப்படும் குழந்தைக்கு அதிக ஆறுதல் அளிப்பது அவள் கடமை. குழந்தை தன்னிடம் வரட்டும்; அதன் பிறகு ஆறுதல் தரலாமே என்று திடமனத்துடன் இருப்பவளையும் தாய் என்று சொல்ல முடியாது. குழந்தையிடம் தான் ஓட வேண்டும். அன்பு செய்ய வேண்டும்.

குருநாதனும் தாயைப் போலத்தான். சிஷ்யனுக்கு அவன் தாய். சிஷ்யன் அஞ்ஞானக்குற்றங்கள் செய்யும் போது குருநாதன் அவன் முகம் பார்ப்பதில்லை. ஒரே ஒரு

விநாடி. உடனே குருநாதனின் மனம் பாகாய் உருகி விடும். ரட்சிக்க வந்தவனே இம்சிக்கலாமா?

குருநாதன் சிஷ்யனிடம் வருகிறான். துயர் துடைக்கிறான். அன்பைக் கொடுக்காமல் அன்பை எதிர் பார்ப்பது விதை போடாமல் விளைச்சலுக்குக் காத்திருக்கும் அறிவீனமாகும்.

தாய் செலுத்தும் அன்பு பூராவும் மகவிடத்திலிருந்து மீண்டும் தாய்க்குக் காணிக்கையாகக் கிடைக்குமா என்றால் அதுவும் துர்லபம்தான். குழந்தையின் கடைத் தேற்றம்-முன்னேற்றம்தான் அந்தத்தாயின் நோக்கமாக இருக்க வேண்டுமே யொழிய எவ்வளவு அன்பைச் செலுத்தினோம், எவ்வளவு பிரதிபலனாகக் கிடைத்தது என்று பார்க்கக் கூடாது. அது வியாபாரமன்று!

குருவும் அதேபோல சிஷ்யனை ஆதரிக்கிறார். குருவுக்கு என்ன லாபம்? தன் சிஷ்யன் ஞான மார்க்கத்தில் மேலே மேலே வருகிறான் என்கிற திருப்தி ஒன்றுதான்.

> ''சேய்முகம் பாராள் சினந்தன ளேனும்
> போய்எடுத்து ஆற்றும் அத் தாய்மீட்டன்றே''

இது உவமை. அப்படியென்றால் 'குருலட்சணங்களிலே கோபம் என்பது முக்கியமானதோ' என்ற சந்தேகம் வரும். குரு ஆன்ம மருத்துவனாக இருந்து வினைநீக்கம் செய்யச் சிகிச்சையாக அதைப் பயன்படுத்துவான் என்பதைத் தத்துவார்த்தியாகப் புராணங்களைப் படித்தவர்கள் உணருவார்கள்.

என் குருநாதராகிய ஸ்ரீ மாசிலாமணி தேசிக சுவாமிகள் உலகியலாகக் கோபப்படும் சாமான்ய மானுடர் அல்லர் என்பதனைச் 'சினந்தனளேனும்' என்ற உம்மையினால் (சினம் அடையாத தன்மையை) நயம்படக் காட்டியுள்ளார் ஸ்ரீ குமர குருபர சுவாமிகள்.

"உம்மிடம் ஒன்று கேட்க வேண்டும். நீர் அடிக்கடி வருபவராக இருந்தால் இன்று கேட்கலாம்; நாளை கேட்கலாம்; பிறிதொருநாள் கேட்கலாம். நீர் அடிக்கடி வருபவரில்லை. இந்த உலகத்திற்கு நீர் அடிக்கடி வருபவரில்லை. நானே அடிக்கடி வருபவன். இப்பிறவி தப்பினால் எப் பிறவி வாய்க்குமோ!

"கொடுங்கள் இன்னருள் கொடுங்கள். நான் கேட்பது போலவே கொடுங்கள்; எனக்கே கொடுங்கள்"

-இப்படி பரபரப்பும் ஆத்மதாகமும் வேகமும் கலந்த சொற்களால் குருநாதரின் அருட் கொடையைத் துரிதப் படுததுகிறார்.

"ஆதலின் எனைப்போல் அடிக்கடி தோன்றலை;
ஈதியால்; இன்னருள்; இன்னணம்; எனக்கே!"

[அடிக்கடி என்பது வழக்குச் சொல். இன்னணம் என்பதற்கு இப்படிக்கு என்ற பொருள் கொள்வதே சாலும்].

"சமயம் கடந்த - அதாவது எல்லாச் சமயங்களும் உணர்த்தும் எல்லாத் தத்துவங்களுக்கும் மேலான தத்துவாதீதனாக இருக்கும் சத்தியமும் நித்தியமுமான பரம் பொருளை எளியேன் உணர்ந்து கொள்ள வேண்டும்".

— இது என் வேண்டுகோள்.

இது முழுஞானத் தன்மையாயிற்றே. பக்குவத்தை ஆராய்ந்த பிறகல்லவா இந்த முழுமையைத் தர வேண்டும் எனத் தாங்கள் தாமதப் படுத்தக் கூடாது.

சிலர் சொல்லுகிறார்கள், 'பக்குவம் இருந்தால் மட்டுமே குருநாதரால் முழுஞானத்தைத் தர முடியும்' என்று. அது ஏற்க முடியாத வார்த்தை-அது உமக்கு அவமானமும் ஆகும். "பரிபவம் நினக்கே" [37].

குருநாதர் செய்யுள் அருள் எல்லாம் தகுதி பார்த்துக் கொடுக்கும் கணக்கு அல்ல. அதற்கு ஓர் உதாரணம் சொல்ல முடியும். தேவரீர் குருநாதராக அவதாரம் செய்வதற்கு முன்னர் தலைமை சான்ற இளைஞராகிய மார்க்கண்டேய ருக்காக- அவர் அரிய உயிரை நிலை நிறுத்துதற்காக, எருமைக் கடாவின் மேல் ஏறி வந்த காலனைக் காலால் உதைத்தருளினீர். அதுபோலப் பக்குவங்களை ஆராய்ந்து கொண்டிருக்கவில்லை. தேவையின் விரைவை உணர்ந்து கிருபை புரிந்தீர். அதுமட்டுமல்லாமல் உம்மையல்லால் வேறு கதியில்லை என்று சர்வபரித்யாகமாக நும் சரண்புகும் பட்சத்தில் வேறு எந்தத் தகுதியும் பாராமல் பூரண அநுக் கிரகம் தருவது தங்களின் வழக்கமும் வரலாறுமாக இருக் கிறது. அந்த வழக்கத்துக்கும் வரலாற்றுக்கும் மாறாகத் தற் பொழுது - குருவாக வந்திருக்கும் இது பொழுதில் என்னிடம் பக்குவத்தை ஆராய்வது பரிபவமாகும். மார்க்கண்டேயரிடம் பக்குவம் இல்லை என்பதல்ல கருத்து. தேவரீர் அதற்குச் சோதனை வைத்து ஆராயவில்லை என்பதே பிரமாணமாகும். எனவே குருதேவரே! ஆராய்ந்தே அநுக்கிரகிப்பீர் என்ற வாதம் ஏற்கக் கூடிய தன்று.

— இக் கருத்துக்களைக் கொண்ட ஸ்ரீ சுவாமிகள் அவர்களின் இனிய கவிதைத் தொடர்கள் வருமாறு:

சமயம் தீர்ந்த தனிப்பொருள் தெரிதற்கு
அமயம் தேர்கலை அருளுதி ஆயினும்
எண்ணீர் ஆண்டைக்கு இலக்கமிட் டிருந்த
அண்ணலம் குமரற்கு ஆருயிர் தோற்ற
கடாவிடை ஊர்திபால் கண்டும்
அடாதென மொழிகுநர் ஆர்கொல்மற் றுனையே.

[தீர்ந்த - கடந்து மேலோங்கிய; தனிப்பொருள் - பரம் பொருள்; தெரிதல் - ஆராய்ந்து காண்டல், உணர்தல்; அமயம் - சமயம், பக்குவம்; தேர்கலே - ஆராய வேண்டா; எண்ணீர் ஆண்டைக்கு - பதினறு வயதுக்கு; இலக்கம் - எல்லே; அண்ணல் - தலேமை; அம் - அழகிய; குமரர் - இளேஞர், மார்க்கண்டேயர்; ஆருயிர் - அரிய உயிர்; தோற்ற - தோன்ற, நிலேத்துவிளங்க; கடாவிடை - ஆண் எருமை; ஊர்தி - வாகனம்; அடாது - முடியாது; மொழிகுநர் - கூறுபவர்; கொல், மற்று - அசைகள்.]

— சிவ சிவ

18666

# திருப்பணி கொள்ளும் திருநாரையூர்

தென்னர்க்காடு மாவட்டம் காட்டுமன்னர்குடி வட்டம் திருநாரையூர் அருள்மிகு சுயம்பிரகாச சுவாமி ஆலயத்திருப்பணி வேலே திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்கள் அருளாசியினல், நிகழும் துன்மதி ஞு தைமீ 30உ [12—2—82] அன்று துவக்கப்பெற்று சிதம்பரம் திரு G. வாகீசம்பிள்ளே அவர்களேத் திருப்பணிக் கமிட்டி தலேவராகக்கொண்டு நடைபெற்றுவருகின்றது. அன்பர்கள் திருப்பணிவேலேக்கு த்தாராளமாக நன்கொடை அளித்து ஸ்ரீ பொள்ளாப்பிள்ளேயாரின் அருளுக்குப் பாத்திரராகக் கேட்டுக் கொள்ளப்படுகிறர்கள்.

S. திருநாவுக்கரசு பிள்ளே,
பொருளாளர்,
திருப்பணிக்கமிட்டி,
9, கனகசபைநகர், சிதம்பரம்.

# களந்தைக் கலித்துறை அந்தாதி

### காப்பு

திருவார் வயற்களந் தாபுரி தத்தைச் சிவபெருமான்
மருவா ரடிமிசை அந்தாதி மாலை வனைவதற்குத்
தருவார் புரந்தரன் வேண்டமுனிவன் தருகரகப்
பொருவார் திரைப்பொன்னி தந்தருள் யானையைப் போற்றுவனே.

### நூல்

சீர்கொண்ட மாலய னிந்திர னோர்க்குந் தெரிவரிதாய்
நார்கொண்ட நல்லடி யாருளக் கோயிலில் நண்ணுமதாய்த்
தேர்கொண்ட வீதிக் களந்தா புரிச்சுக தேவன்நறை
வார்கொண்ட தாட்டா மரையிலென் நெஞ்செனும் வண்டுறுமே. 1

வண்டேறு கொன்றைச் சுகநா தரையும் மருங்கிருந்த
தண்டேன் மொழிநற் சவுந்தரத் தாயையும் தாமரைப்பூ
விண்டேன் மணக்குஞ் சுகதீர்த்த மூழ்கிவெண் ணீறணிந்தே
கண்டேன் களந்தையி லேயினி மேலென்ன காண்பதுவே. 2

காணப்பெற் றேன்சுக நாதர் தெரிசனங் கண்குளிர
ஊணப்பெற் றேன்திருத் தாளெனு நாற்றினை உள்ளத்திலே
பூணப்பெற் றேன்நற் சவுந்தரி யார்பதம் புன்றலையில்
மாணப்பெற் றேன்களத் தூரிலென் போலில்லை வையகத்தே: 3

வையகந் தன்னிற் செருக்குறுஞ் செல்வர் மனைகடொறும்
பையென வல்லுத ரத்தின் பொருட்டுப் பலப்பலவாம்
பொய்யினைப் பேசு மெனக்கரு ளாதது பூங்களந்தை
நெய்வடிச் சூலச் சுகலிங்க தேவநன் நீதியன்றே, 4

நீயே துணையன்றி வேறோர் துணையில்லை நீணிலத்திற்
தாயே யிகழ்ந்திடிற் பிள்ளைக் குறுதுணை தானுமுண்டோ
மாயே சுரிநற் சவுந்தர வல்லி மணாளைவேற்
சேயே தருஞ்சுக நாதர் களந்தையிற் சிற்பரனே. 5

சிற்பர வுய்குவ ஞேமன வாக்குக்குஞ் சேணிருந்த
தற்பர நிட்கள வானந்த நிர்த்தத் தனிமுதல்வ
பொற்புறு தென்களந் தாபுரி மேவிய போர்விசயன்
மற்பொரு தத்தைலிங் காவரு ளாவிடில் வஞ்சகனே.

வஞ்சனைப் பாட்டகங் கேட்டுக் கிடமும் மலக்குழிசி
வெஞ்சினக் கோட்டை யகந்தைப் பரணி வியாதியுறை
எஞ்சலில் பொய்ப்பிண்ட மெய்ப்பகை யாக்கை யிதுசுமக்க
அஞ்சினன் தத்தைலிங் காகளந் தாபுரி யற்புதனே.

அற்புத நின்னரு ளெஃகுளி யாற்பிளந் தாலயத்துப்
பொற்புறு பித்திகைக் காம்பணி செய்தருள் பொற்களந்தை
எற்பர வும்புனத் தத்தைலிங் கேச இமைப்பினமை
கற்பனைக் கப்புற மானவென் நெஞ்சகக் கல்லினையே. 8

கன்னிகர் நெஞ்சினை நின்னடியாரைக் கணக்கெழுதும்
பொன்னிக ரேட்டிற் பொறித்திடு மோவன்றிப் போக்கிடுமோ
உன்னிகர் மெய்யரு ளெவ்வண்ண மோதென் னுறுகளந்தை
நன்னகர் வாழ்தத்தை லிங்கா அழகம்மை நாயகனே. 9

நாயக புந்திக் கவலை நவிய நடுங்கிநினை
வாயகங் காயங் கொடுபணிந் துன்னி வழுத்துகின்றேன்
தூய கருணை யமுத மளித்துச் சுகந்தருவாய்
பாய களந்தைப் பதிச்சுக லிங்கமெய்ப் பண்ணவனே. 10

பண்ணிய புண்ணிய மென்னைகொலோ நெற் பழனவயல்
தண்ணிய சோலை புடைசூழ் களந்தைத் தனிநகர்க்கே
நண்ணினன் ஆலயஞ் சூழ்ந்து சவுந்தர நாயகியோ
டெண்ணி யருள்சுக நாதா பணிந்துமை ஏத்துதற்கே. 11

ஏத்தாது புல்லியர் கூட்டத் திணங்கி இரவுபகல்
நாத்தானுங் கூழை படப்போய் நவின்று நலியுமெனை
பூத்தார் களந்தைச் சுகலிங்கத் தேவநின் பொன்னடிக்கே
காத்தாண் டருட்பணி தந்திடு வேதத்தின் காரணனே. 12

காரண னேசுக நாதா சவுந்தரக் கன்னியொடும்
பூரண மால்விடை மீது வருமுமைப் போற்றிசெய
ஆரண னேமிக ஆசைப்பட் டேன்நல் லருள்புரிவாய்
தாரணி பூம்பொழிற் சூழ்களந் தாபுரிச் சங்கரனே. 13

சங்கர நீரெனக் காரென மான்றுடர் தன்மையைப்போற்
சங்கர விச்சுக வாழ்வினி லின்பக் களிப்பையுற்றே
இங்கர வென்றில னுய்வகையே (யருளேர்) களந்தைப்
புங்கர வம்புனை தத்தைலிங் கேச புராந்தகனே. (14)

அந்தகன் பாசங்கைக் கொண்டு வருமுனி வாயிழையும்
மைந்தருங் கூட வருந்துணையோ சொல் மடநெஞ்சமே
உய்ந்திடு நன்னெறி தென்களந் தாபுரி உத்தமன்வெண்
சந்திர சேகர னுந்தத்தை லிங்கர் பொற் றூண்மலரே. (15)

மலர்கொடு போற்றிட வாய்கொடு வாழ்த்த மனத்தினுருக்
கலரொடு கூடிக் கெடுமன மேதென் களந்தையில்வாழ்
அலர்கொடு தத்தைலிங் கேச ரழகம்மைக் காப்பணிசெய்
நலர்திருக் கூட்டம் புகுந்துற வாடின் நரகில்லையே. (16)

நரகத் திடினும் புலவோர் தமனிய நாட்டிலுறை
விரகத் தரம்பையர் நாப்ப ணிடினும் வியன்களந்தை
உரகத் திருக்கரத் தத்தைலிங் கேச வுனதுமலர்
அரவக் கழலடிக் கன்பெனும் வாழ்வை அருளுவையே. (17)

அருளுரு வாயுஞ் சகளமு மாயு மகிலமெல்லாந்
தெருளுறு சங்கம மாகிய நின்றது தென்களந்தை
சுருள்வரி கொன்றைச் சுகலிங்க ரென்றே துணிநெஞ்சமே
மருளறு மீற்றினில் மீளாத முத்தி மருவுவையே (18)

மருவா ரிதழி யணிசடைக் காடும் மலர்ப்பதமுந்
திருவார் முகமைந்துங் கண்ணொரு மூன்றுஞ் செறிமழுமான்
தருவார் கரமும் அழகா விடமுங்கண் தான்மகிழத்
தெருவார் களந்தையிற் றத்தைலிங் கத்தை தெரிசித்தனே. (19)

சித்தசன் வாளி துரத்திட வோடித் திருந்திழையார்
முத்தணி கொங்கை துருகத் தொளித்து முழிக்குமெனைச்
செய்த்தலை வாளை மடையுடைத் தேறுந் திருக்களந்தை
அத்து விதச்சுக லிங்கா தடுத்தெனை ஆண்டருளே. (20)

ஆண்டுகள் தோறும் அயன மிரண்டினில் ஆதவன் வந்(து)
ஈண்டு பணிசுக லிங்கர் விடமுண் டிருந்ததெற்றால்
சேண்டவழ் சோலைக் களந்தைச் சவுந்தரச் சேயிழைதன்
நீண்டிடு மங்கல நாண்வலி யால்நிலை நின்றதுவே. (21)

# கற்பனை கடந்தவன்

## கி. வா. ஜகந்நாதன்.

இறைவன் செய்த திருவிளையாடல்கள் பல. எழுந்தருளும் கோலங்களும் பல. வேறு வேறாக உள்ள திருக் கோலங்களில் ஒன்றனோடு ஒன்று மாறுபட்டு நிற்பனவும் உண்டு. ''ஆண்டி முதல் அரசன் வரை'' என்று ஒரு பழமொழி உண்டு. தியாகேசப் பெருமானாகிய இறைவன் ஆண்டியாக இரந்து நிற்பான்; அரசனாக ஆட்சியும் புரிவான். அவனைப் போகி என்பதா? யோகி என்பதா? இரு வகை நிலையிலும் அவன் எழுந்தருளுவான். இந்த அதிசயமான தன்மையை எடுத்துச் சொல்லப் புகுகிறார் குமரகுருபரர்.

### பிச்சை எடுப்பவன்

தாருகா வனத்து முனிவர்களின் இல்லத்தை அடைந்து வாயிலில் நின்று அவர்களுடைய மனைவிமார்கள் இட்ட பிச்சையை ஏற்றவன் இறைவன். அப்போது அவனுடைய கோலத்தைப் பார்த்தால் பிச்சையெடுக்க நல்ல பாத்திரம் கூடக் கிடைக்காத ஏழையைப் போல இருக்கும். ஆமையோட்டைப் பூண்டு பிரம கபாலமாகிய தலையோட்டை ஏந்திச் சென்றான். அவனுக்கு வேறு திருவோடு கிடைக்கவில்லை போலும்! இந்தக் கோலத்தோடு போய் நிற்கும் இடம் அழகிய மடந்தையர் வாழும் இடம். அவர்கள் பிச்சை இடும்போது பார்த்தால் அவனுடைய பிச்சைக்கார வேடமும் அவர்களுடைய அழகிய தோற்றமும் ஒன்றுக்கொன்று மாறுபாடாக இருக்கும். அவர்கள் வீடுகளில் ஒவ்வொரு வீட்டின் வாசலுக்கும் சென்று சென்று பிச்சை வாங்கி உண்பது அவனுடைய செயல்களில் ஒன்று.

**ஆமைஒடு அணிந்து தலையோடு
ஏந்திக்
காமரு மடந்தையர் கடைதொறும்
கடைதொறும்
பலி தேர்ந்து உண்ணினும் உண்ணும்**

*[காமரு-அழகிய; கடை-வாசல்.
பலி-பிச்சை.]*

## அரசு வீற்றிருப்பவன்

இந்த நிலைக்கு நேர் மாறாக அவன் தியாகராசனாக எழுந்தருளியிருப்பான். அந்த அரசக் கோலம் எப்படி இருக்கும்? வேறு யாருக்கும் அவ்வளவு சிறப்பு இல்லை.

இதோ தியாகேசன் சிங்காதனத்தில் எழுந்தருளியிருக்கிறான். அவன் திருமுன் மிக மிகப் பெரியவர்கள் வந்து இறைஞ்சி எழுந்து கைகட்டி வாய்புதைத்து நிற்கிறார்கள். அப்படி நிற்பவர்கள் சாமானியர் அல்லர். பசியதுழாய் மாலையை அணிந்து நீலமேகத்தைப் போன்ற திருமேனியை உடைய திருமாலே ஒருபக்கம் நின்று கொண்டிருக்கிறார். பழைய வேதங்களை ஓதும் பிரமதேவன் ஒரு பக்கம் நிற்கிறான். எல்லாவற்றினும் சிறந்த போகத்தை நுகரும் விண்ணவர்க்கு அரசனாகிய இந்திரன் ஒரு பக்கம் நிற்கிறான். தம்முடைய அரசனே அப்படி நிற்கும் போது வருணன், வாயு முதலியவர்கள் சும்மா இருப்பார்களா? அவர்களும் இறைஞ்சி பணிவுடன் நிற்கிறார்கள். இந்திரனைச் சேர்ந்த எல்லோரும் இந்த முறையில் நின்று கொண்டிருக்கிறார்கள்.

பைந்துழாய் முகிலும் பழமறை
விரிஞ்சனும்
இந்திராதியரும் இறைஞ்சினர் நிற்ப

[துழாய்- துளவம், முகில் -திருமால் விரிஞ்சன்-பிரமன். இந்திராதியர்- இந்திரன் முதலிய தேவர்கள். இறைஞ்சினர்-வணங்கி; முற்றெச்சம்.]

அவ்வாறு நிற்கும் தேவர்களுக்குத் தியாகேசன், "நீ இன்ன காரியத்தைச் செய்; நீ இதைச் செய்" என்று ஆணையிட்டு அந்தச் செயல்களுக்குரிய பதவிகளை வழங்குகிறான். அவர்களுக்குரிய காலவரையறை தீர்ந்தவுடன் அவர்களுடைய பதவிகளில் வேறுள்ளவர்களை நியமிக்கிறான். இவ்வாறு, அரசன் அதிகாரிகளை வேலை கொடுத்தும் வேலையில் நின்று நீக்கியும் ஆணை செலுத்துவதைப் போலத் தியாகராசனும் செய்கிறான்.

மற்று அவர் பதங்கள் மாற்றியும்
வழங்கியும்.

மற்று: அசை. பதங்கள் – பதவிகளை. மாற்றியும் – அகற்றியும்.]

அரசர்கள் பகைவர்களைப் போரிட்டும்பிறவாறும் அழிப்பார்கள். தம்மை அடைந்தவர்களைப் பாதுகாப்பார்கள். தியாக ராசனும் அந்தச் செயல்களைச் செய்கிறான்.

பற்றலர்ச் செகுத்தும் உற்றவர்த்
தாங்கியும்;

[பற்றலர் – பகைவர்களை. செகுத்தும்-அழித்தும். உற்றவர்-தன்னை அண்டினவர்களை, தாங்கியும் - பாதுகாத்தும், "உறுநர்த்

தாங்கிய மதனுடை நோன்ருள் செறுநர்த் தேய்த்த செல்உறழ் தடக்கை'' என்பது திருமுருகாற்றுப்படை]

அரசர்களை நின்றும் இருந்தும் புகழ்பவர் பலர். பலர் அவர்களை இறைஞ்சி வழிபட்டு ஏவல் கேட்டு பணிபுரிவர்.

பரசுநர் பரசப் பணிகுநர் பணிய,

[பரசுநர் – புகழ்வோர்: பணிகுநர் – பணிந்து வழிபடு வோர்]

இவ்வாறு தியாகப் பெருமான் அரசனுக வீற்றிருப்பான். திருவாரூரில் அரசனுக இருந்து ஆட்சிபுரிந்ததாக அந்த ஊர்ப் புராணம் சொல்கிறது:

அரசு வீற்றிருப்பினும் இருக்கும்.
யோகத்திருக் கோலம்.

இனி, தியாகேசன் போகியாக இருப்பதைச் சொல்கிருர்:

இறைவன் சிவந்த சடை விரிந்திருக்கும் கோலம் பூண்டவன்; திருநீறு பூசியவன்; எருக்கங் கண்ணியைச் சூடியவன். இவை அவனுடைய தவக் கோலத்தைக் காட்டுவன அல்ல. போகிகட்கு இத்தகைய யோக சாதனம் இல்லை. அப்படியானல் இந்த அடையாளங்கள் எதைக் காட்டுகின்றன? ஒருபெண்ணிடம் காதல் கொண்டவன் அது நிறைவேறப் பலரும் காணும்படி பனமடலால் குதிரைசெய்து அதன்மேல்ஊர்ந்து வருவான். பிறருடையகவனத்தை ஈர்ப்பதற்காக, எருக்கங் கண்ணி முதலியவற்றைச் சூடி அந்தப் பெண்ணின் படத்தை அந்த மடல்மாவில் வைத்துக் கொண்டு வருவான். அதைக்கண்ட சான்ருேர்கள் அந்தக் காதலனையும் அவனுடைய காதலியையும் ஒன்றுபடுத்த முயல்வார்கள். இலக்கியங்களில் இந்த மடலேறும் வழக்கத்தைப் பற்றிய செய்திகளைக் காணலாம்.

இறைவன் தன் காதலையுடைய வளும்வாமபாகத்தில் உறைபவளுமாகிய அம்பிகை நொடியளவு நேரம் பிரிந்தாலும் அந்தப் பிரிவை ஆற்ருமல் மடலூரும் குறிப்புத் தோன்ற, செஞ்சடையை விரித்து, வெண்பொடியைப் பூசி எருக்கங், கண்ணியையும் சூடி இருப்பானும்; இயல்பாக உள்ள அந்தக் கோலமே மடலூரும் குறிப்பைத் தோன்றச் செய்யும்.

யோக சாதனம் போகிகட்கு
இன்மையின்
செஞ்சடை விரித்து வெண்பொடி
பூசி,
எருக்கங் கண்ணியும் சூடி விருப்புடை
இடப்பால் மடந்தை நொடிப் போது
தணப்பினும்
மடல் ஊர் குறிப்புத் தோன்ற,

[யோக சாதனம் – யோகத்திற்குரிய சின்னங்கள். வெண்பொடி–

திருநீறு. கண்ணி – தலையில் அணியும் மாலை. இடப்பால் – வாமபாகம். தணப்பினும் - பிரிந்தாலும். இயல்பாக சடை திருநீறு, எருக்கங் கண்ணி ஆகியவற்றை அணிந்திருந்தாலும் அவை மடலூர்பவனுடைய தோற்றத்தை அளிக்கின்றன]

மடலூர்வோர் கோலத்தைப் பின் வரும் செய்யுட்கள் தெரிவிப்பது இங்கே அறிவதற்குரியவை.

''மாஎன மடலும் ஊர்ப;
பூஎன
குவி முகிழ் எருக்கங் கண்ணியும்
சூடுப;
மறுகின் ஆர்க்கவும் படுப
பிறிதும் ஆகுப காமம் காழ்க்
கொளினே''

[குறுந்தொகை, 17;]

[மா–குதிரை. மறுகின்-வீதியில் காழ்க்கொளின் - முறுகில்]

''எருக்கின்
பிணையலங் கண்ணி மிலைந்து மணி
ஆர்ப்ப
ஓங்கிரும் பெண்ணை மடலூர்ந்து''

[கலித்தொகை.]

[பிணையல் - கட்டுதலையுடைய, மிலைந்து- சூடி' பெண்ணை-பனை]

''மங்கையர்தம் கண்ணால் மயங்
கினர் வெள்எலும்பும்
துங்க எருக்கும் தொடுத்து
அணிந்து-அங்கம் எலாம்
வெந்தேறு சாம்பல் மிகஅணிந்து
வீதிதொறும்
வந்தேறி ஊர்வர் மடல்''

[கிளவித்தெளிவு.]

[அங்கம்எலாம் - உறுப்புக்களில் எல்லாம்.]

''மாஎன்று உரைத்து மடல்
ஏறுப; மன்று தோறும்
பூஎன்று எருக்கின் துணர்சூடும்;
புன்மை கொண்டே
பேய்என்று எழுந்து பிறர்
ஆர்ப்பவும் நிற்ப; காம
நோய்நன்கு எழுந்து நனிகாழ்க்
கொள்வ தாயின் அக்கால்''

(வளையாபதி)

[மா - குதிரை. ஏறுப - ஏறுவர். மன்று – பொதுவிடம். துணர்- பூங்கொத்து. புன்மை – பொலிவற்றஇயல்பு. ஆர்ப்பவும் – ஆரவாரம் செய்யவும். நிற்ப - நிற்பார்கள். காழ்க்கொள்வதாயின் - முறுகினல், அக்கால் - அந்தச் சமயத்தில்.]

இறைவன் இயல்பாகவே எருக்கங்கண்ணி சூடுதலை, ''வெள்ளெருக்கஞ் சடைமுடியான்'' என்ற கம்பராமாயணப் பாடலிலும் காணலாம்.

இவ்வாறு மடலூர்வதற்கு ஆயத்தமாக இருப்பவனைப் போல உள்ள இறைவன் விடுவதற்கரிய காதல் அதிகமாக அதனால் மயக்கமடைந்து அம்பிகையின் தாமரை போன்ற சிறிய அடிகளை வருடிப் பணிவான். இது ஆச்சரியத்தைத்

தரும் செயல். அம்பிகை சிறிதே சினம் கொண்டவளைப் போல ஊடுவாள்; அப்போது அவனும் வருந்துவான். பிறகு அப்பெருமாட்டி மனம் இணங்கி வரும்போது அவளோடு ஒன்று பட்டு இன்புறுவான். இல்வாழ் வாருக்குப் புலவியும் கலவியும் இன்பத்தை மிகுதிப்படுத்தும். அவ்வண்ணம் இறைவன் போகத்தை நுகர்ந்திருப்பதும் ஒரு நிலை.

விடல் அரும்
காமம் மீதுஊர ஏம் உற்று இரந்து
அவள்
தாமரைச் சீறடி தைவந்து, அம்ம;
புலவியிற் புலந்தும் கலவியிற் களித்
தும்
போகம் ஆர்ந்திருப்பினும் இருக்கும்.

[ஏம்- ஏமம்; மயக்கம். தைவந்து- வருடி. அம்ம; வியப்புக் குறிப்பு. புலவி - ஊடல். கலவி -இணைதல். ஆர்ந்து - நுகர்ந்து.]

யோகக் கோலம்

இனி, யோகத்திருக் கோலத்தைச் சொல்கிறார்.

யோகிகளிற் பலர் பலகாலம் முயன்றும் தம் இலட்சியம் கைகூடாமல் வருந்துவார்கள். அவர்களுக்குக் கிடைக்காத விளக்கமான பொருள் தன் கையில் அகப்பட்டு நிற்க, அந்த நிலையில் தன் திருக்கையில் ஞானமுத்திரையாகிய சின்முத்திரையைக் காட்டிக் கொண்டு மௌனமாக யோகம் பயிலும் நிலையிலும் இறைவன் இருப்பான்.

18666

யோகிகட்கு
எய்தா ஒண்பொருள் கைவந்து
கிடைப்ப,
ஞான முத்திரை சாத்தி மோனமோ
டியோகுசெய் திருப்பினும் இருக்கும்

[எய்தா - கிடைக்காத. ஒண்பொருள்-விளக்கமாகிய ஞானம். கைவந்து - அகப்பட்டு. ஞான முத்திரை-சின்முத்திரை. சாத்தி - ஏந்தி. மோனமோடு என்பதில் ஈற்றிலுள்ள குற்றுகரம் குற்றியலிகரமாகத் திரிந்தது. யோகு - யோகம். இது தட்சிணாமூர்த்தி திருக்கோலம்.]

திருவாரூர்ப்பெருமை

இவ்வாறுள்ள தியாகேசன் எழுந்தருளியிருக்கும் திருவாரூரின் சிறப்பை விரித்துரைக்கத் தொடங்குகிறார் ஆசிரியர்.

திருவாரூரில் உள்ள மாளிகைகள் மிகவும் உயரமாக இருக்கின்றன. அவற்றின் மேலே நிலாமுற்றங்கள் உள்ளன. அங்கே நிகழும் காட்சியைச் சொல்கிறார் குமரகுருபரர்.

மீகெழு
தமனியமாடத்துஅரமிய முற்றத்து

[மீகெழு - மேலே பொருந்திய. தமனிய மாடம் - பொன்னாலான

மாளிகை. அரமிய முற்றம் - நிலா முற்றம்.]

அந்த நிலா முற்றத்தில் பெண்கள் விளையாடுகிறார்கள். பெண்களைக் காமனுடைய படை என்பது மரபு. காமனுடைய அரசியல் நன்கு நடைபெறப் பெண்களாகிய படையினர் உதவுகிறார்கள். படையில் உள்ள வீரர்கள் யானை, வாள், தேர் முதலியவற்றைக் கொண்டிருப்பார்கள். அந்த மகளிரும் அவற்றைப் படைத்திருக்கிறார்களாம் ஐந்து மலரம்புகளையுடைய காமன் தன் அரசாட்சியை நடத்துவதற்குத் துணையாக அந்த மகளிர் நகில்களாகிய யானைகளையும், கொல்லுகின்ற கண்களாகிய வாளாயுதங்களையும், சில வடங்களையணிந்த இரகசிய உறுப்பாகிய வெல்லும் கொடியையுடைய தேர்களையும், வேறு பல உறுப்புக்களாகிய படைக்கலங்களையும் கொண்டு விளங்குகிறார்கள்.

ஐங்கணைக் கிழவன் அரசியல் நடத்தக்
கொங்கை மால்களிறும் கொலைக் கண் வாட்படையும்
சில்காழ் அல்குல் வெல்கொடித் தேரும்
பல்வகை உறுப்பும் படை உறுப் பாக.

[கணை - அம்பு கிழவன் - உரியவன்; காமன். மால்களிறு- பெரியயானை. சில்காழ்-சில வடங்களை அணிந்த]

அவர்கள் மிகவும் குறுகிய இடையை உடையவர்கள். பிறவியென்னும் பகையை அழிப்பதற்காகத் தவம்புரியும் முனிவர்களைத் தம் பகைவரைப் போல எண்ணி அவர்களை அலைத்து அவர்களுடைய தவத்தை அழிக்கிறார்கள் அந்த மகளிர். அவர்கள் தேவலோகப் பெண்களைப் போல எழிலும் வளமும் இளமையும் உடையவர்களாகத் தோற்றம் அளிக்கிறார்கள். அவர்கள் நிலா முற்றத்தில் கூடியிருக்கிறார்கள்.

பவக்குறும்பு எறியும் தவக்குறும்பு எறிந்து
நுணங்கிய நுசுப்பின் அணங்கனார் குழுமி

[பவக்குறும்பு - பிறவியாகிய பகையை. எறியும் - மோதிப் போக்க முயலும். தவக்குறும்பு -தவத்தினராகிய பகையை. எறிந்து - அலைத்து. நுணங்கிய- நுட்பமாக அமைந்த. நுசுப்பினர் - இடையை உடையவர், அணங்கு அனார் - தெய்வப்பெண்களைப்போன்றவர்கள். குழுமி- கூடி.]

அந்தப் பெண்கள் இருவேறு கட்சிகளாகப் பிரிந்து கழங்கை எறிந்து விளையாடுகிறார்கள்.

கைவகுத் திருந்து கழங்கு எறிந்து ஆட.

[கைவகுத்து - கட்சியாகப் பிரித்து. கழங்கு - கழற்சிக்காயைப் போலச் செய்த விளையாட்டு கருவி.]

அவர்கள் கழங்குகளை மேலே விசியும் கீழே விழுமுன் பற்றியும் ஆடிக் கொண்டிருக்கிறார்கள். கழங்குகள் மேலே போகும் போது கண்ணின் பார்வையும் அவற்றையே மேல்நோக்கிப் பார்க்கின்றன. அவர்கள் நீல மணிகளால் செய்த கழங்குகளை வைத்துக்கொண்டு விளையாடுகிறார்கள். காந்தளைப் போன்ற மகளிர் கைகளிலிருந்து நீலமணிக் கழங்குகள் மேலே போகின்றன. அவற்றோடு மையுண்ட மகளிர் கண்களும் மேல்நோக்கிச் சென்றும் கீழ்நோக்கிச் சென்று வந்தும் மறிந்தும் எழுந்தும் சுழலுகின்றன. அந்தக் காட்சி எப்படி இருக்கிறது?

கைகளாகிய காந்தள் மலரில் இருந்த வண்டுக் கூட்டம் ஆரவாரித்தெழ முகமாகிய தாமரைகளில் உள்ள கண்களாகிய சிறையையுடைய வண்டினம் ஆகிய இரண்டு வண்டுக் கூட்டமும் கலந்து ஒன்றாகத் தழுவி இன்புறுவதைப்போலத்தோன்றுகிறதாம்.

மைஉண் கண்கள் மறிந்து எழுந்து
அலமரல்
செம்முகத் தாமரைச் சிறை அளிக்
குலங்கள்
அம் மென் காந்தளின் அளிக்குலம்
ஆர்த்து எழக்
கலந்து உடன் தழீஇக் காமுறல்
நிகர்க்கும்.

[மறிந்து-கீழே நோக்கி. எழுந்து-மேல் நோக்கி. அலமரல் - சுழலுதல். திரிதல். சிவந்த இடத்தையுடைய தாமரை. அதில் உள்ள கண்கள் வண்டுக்கூட்டம் போல உள்ளன. அளி-வண்டு. அம்-அழகிய, காந்தள் என்றது கைகளை. ஆர்த்து- ஆரவாரித்து. தழீஇ-தழுவி. காமுறல்-காமம் உறுதல்; இன்புறுதல்.]

இவ்வாறுள்ள காட்சிகளைத் திருவாரூரில் காணலாம். திருவாரூர் பொன் நிறத்தைக் காட்டும் திருவீதிகளை உடையது. தியாகேசன் எழுந்தருளும் போது முன்னே பொன்னை இறைப்பார்களாம். அதனால் "அடிக்கு ஒராயிரம் பொன்இறைக்கும் ஐயன்" என்ற திருநாமம் அப்பெருமானுக்கு அமைந்தது. திருக்கோயிலுள்ள மதில் பொலிவு பெற்று விளங்குகிறது. அத்தகைய பெருமையை உடைய திருவாரூரில் உள்ள சிவபெருமான் நெற்றியிலே கண்ணையுடையவன்.

அவன் இன்னவாறு இருப்பான் என்று திட்டமாகச் சொல்ல முடியாது. பிச்சாடனனாக இருப்பதைக் கண்டு, 'இவன் பிச்சை யெடுப்பவன்' என்று சொல்ல முடியாது; அரசக் கோலம் கொண்டு விண்ணவர் பணிய அரசாட்சி செய்பவன் அவன். உமாதேவியோடு ஒன்றிப் போகியாக இருக்கிறான் என்றால், தட்சிணா மூர்த்தியாக யோகியாகவும் உள்ளான். நம்முடைய கற்பனைக் கெல்லாம் அப்பாற்பட்டும் நிற்கிறான். ஆகையால் அப்பெருமான் நிற்பது இந்த நிலை தான் என்று வரையறுத்துச் சொல்ல இயலாது; அவன் நிற்கும் நிலை ஒரு நியமத்துக்குள் அடங்காது.

பொலன் செய் வீதிப்பொன் மதிற்
கமலை
அண்ணல் மாநகர்க் கண்ணுதற்
கடவுள்
கற்பனை கழன்று நிற்றலின்,
நிற்பது இந்நிலை எனும் நியமமோ
இன்றே.

[பொலன் செய்- பொன்னைப் படைத்த. அண்ணல்- பெருமை. கழன்று- கடந்து. நியமம்-வரையறை. ஓவும் ஏயும் அசை நிலைகள்.]

ஏதேனும் ஒரு கோலத்தைக் கண்டவர்கள் இறைவன் கோலம் இதுதான் என்று சொல்லலாம். பிறிதோர் கோலத்தைக் கண்ட பிறகு, ''இதுவும் அவன் கோலம்'' என்று எண்ணுவார்கள். இப்படி உள்ள பலவகைக் கோலங்களையும் கண்டவர்கள், ''இறைவனுடைய திருக்கோலங்கள் எல்லாவற்றையும் நாங்கள் பார்த்து விட்டோம்'' என்று சொல்லலாம். ஆனால் அவன் இவற்றை யெல்லாம் கடந்து நிற்பவன். மனிதன் கற்பனையினால் அமைத்துக் கொண்டு காணும் நிலைகளுக்கும் அப்பாற்பட்டவன். ஆகவே, அவன் நிலையை இன்னதென்று சொல்லித் தீர்மானம் செய்ய முடியாது.

ஆமைஓடு அணிந்து தலையோடு
ஏந்திக்
காமரு மடந்தையர் கடை
தொறும் கடைதொறும்
பலிதேர்ந்து உண்ணினும்
உண்ணும்; ஒலிகழல்
பைந்துழாய் முகிலும் பழமறை
விரிஞ்சனும்
இந்திரா தியரும் இறைஞ்சினர்
நிற்ப,
மற்றுஅவர் பதங்கள் மாற்றியும்
வழங்கியும்
பற்றலர்ச் செகுத்தும் உற்றவர்த்
தாங்கியும்
பரசுநர் பரசப் பணிகுநர் பணிய
அரசுவீற் றிருப்பினும் இருக்கும்;
உரைசெயும்
யோக சாதனம் போகிகட்கு
இன்மையின்
செஞ்சடை விரித்து வெண்பொடி
பூசி

எருக்கங் கண்ணியும்
சூடி விருப்புடை
இடப்பால் மடந்தை
நொடிப் போழ்து தணப்பினும்
மடல்ஊர் குறிப்புத்
தோன்ற, விடல் அரும்
காமம்மீது ஊர
ஏமுற்று இரந்து அவள்
தாமரைச் சீறடி
கைவந்து, அம்ம!
புலவியிற் புலந்தும்
கலவியிற் களித்தும்
போகம் ஆர்ந்து இருப்பினும்
இருக்கும்; யோகிகட்கு
எய்தா ஒண்பொருள்
கைவந்து கிடைப்ப
ஞான முத்திரை
சாத்தி மோனமோ
டியோகுசெய்து இருப்பினும்
இருக்கும்; மீகெழு
தமனிய மாடத்து
அரமிய முற்றத்து
ஐங்கணைக் கிழவன்
அரசிடல் நடாத்தக்
கொங்கைமால் களிறும்
கொலைக் கண்வாட் படையும்
சில்காழ் அல்குல்
வெல்கொடித் தேரும்
பல்வகை உறுப்பும்
படைஉறுப்பு ஆகப்
பவக்குறும்பு எறியும்
தவக் குறும்பு எறிந்து
நுணங்கிய நுசுப்பின்
அணங்கனார் குழுமிக்
கைவகுத்து இருந்து
கழங்குஎறிந்து ஆட

மைஉண் கண்கள்
மறிந்து எழுந்து அலமரல்
செம்முகத் தாமரைச்
சிறைஅளிக் குலங்கள்
அம்மென் காந்தளின்
அளிக்குலம் ஆர்த்து எழக்
கலந்துஉடன் தழீஇக்
காமுறல் நிகர்க்கும்.
பொலன் செய் வீதிப்
பொன்மதிற் கமலை
அண்ணல் மாநகர்க்
கண்ணுதற் கடவுள்
கற்பனை கழன்று நிற்றலின்
நிற்பதுஇந் நிலை எனும்
நியமமோ இன்றே.

ஆமையின் ஓட்டை அணிந்து பிரம கபாலமாகிய தலை ஓட்டைக் கையில் ஏந்தி, அழகிய தாருகா வனத்து முனிவர்களின் மனைவியராகிய பெண்களுடைய வீட்டு வாசல் தோறும் வாசல் தோறும் பிச்சை கேட்டு வாங்கி உண்டாலும் உண்ணுவான். ஒலிக்கின்ற வீரகண்டையையும் பசியதுளவையும் அணிந்த திருமாலும் பழைய வேதங்களை ஓதும் பிரமதேவனும் இந்திரன் முதலிய தேவரும் பணிந்து நிற்க, அவர்களுடைய பதவிகளை அவர்களிடமிருந்து மாற்றியும் மீட்டும் வழங்கியும், பகைவர்களை அழித்தும் தன்னை அடைந்தோரைப் பாதுகாத்தும், அரசனாக வீற்றிருந்தாலும்

இருப்பான். பெரியோர் எடுத்துக் கூறும் யோகத்துக்குரிய சாதனங்கள் போகிகளுக்கு இல்லாமையால் செம்மையானசடைகளை விரித்து வெண்மையான திருநீற்றைப் பூசி, எருக்க மாலையையும் தலையில் அணிந்து, விருப்பத்தை உடையவளும் வாமபாகத்தில் உறைபவளுமாகிய உமாதேவி நொடியளவு நேரம் பிரிந்தாலும், அந்தப் பிரிவு தாங்காமல் பனமடலால் ஆன குதிரையின் மேல் ஊர்ந்துவரும் குறிப்புத் தோன்ற விடுவதற்கரிய காமம் மேல் ஏற மயக்கமுற்று யாசித்து அப்பெருமாட்டியின் தாமரை மலரைப் போன்ற சிறிய அடிகளை வருடி, என்ன ஆச்சர்யம்! ஊடலினால் வருந்தியும் கூடலினால் மகிழ்ந்தும் போகத்தை அநுபவித்துக் கொண்டிருந்தாலும் இருப்பான். யோகிகளுக்கு அகப்படாத விளக்கமான மெய்ப் பொருள் அகப்பட்டுக் கிடைக்க சின் முத்திரை காட்டி மோனநிலையோடு யோகம் செய்து கொண்டு இருந்தாலும் இருப்பான். மேல் ஓங்கிய பொன் மாளிகைளில் நிலா முற்றத்தில் ஐந்து மலரம்புகளையுடைய காமன் தன் அரசாட்சியை நடத்த துணையாககொங்கையாகியபெரிய களிறுகளையும், கொலை செய்யும் கண்ணாகிய வாளாயுதங்களையும் சிலவடங்களை அணிந்த இரகசிய உறுப்பாகிய வெல்லும் கொடியை உடைய தேர்களையும்; பலவகை அங்கங்களையும் படைக்கு உரிய உறுப்புகளாகக் கொண்டு, பிறப்பென்னும் பகையை அழிக்க முயலும் தவமுனிவர்களாகிய பகையை அலைத்து, நுட்பமாக உள்ள இடையையுடைய தேவ மகளிரைப் போன்ற மகளிர் ஒன்று கூடி, கட்சியாக வகுத்துக் கொண்டிருந்து நீலமணிகளாகிய கழங்குகளை வீசி விளையாட அவர்களுடைய மையுண்ட கண்கள் கீழ்நோக்கியும் மேல் நோக்கியும் திரிதல் செம்மையான முகமாகிய தாமரையில்உள்ளசிறகையுடைய வண்டினங்கள் அழகிய மென்மையான காந்தள் மலரில் மொய்த்த வண்டினம்,ஆரவாரித்துஎழஅவற்றுடன் கலந்து தழுவி இன்புறுவதை ஒக்கும் காட்சியை உடையதும்பொன்னாற்செய்தவீதியையும் கரும் பொன்னாலாகிய மதிலையும் உடையதிருவாரூராகிய பெருமையையுடைய மாநகரத்தில் எழுந்தருளியுள்ள நெற்றியிற் கண் படைத்த தெய்வமாகிய தியாகேசன், கற்பனையைக் கடந்து நிற்பதால் அவன் நிற்பது இந்த நிலை என்னும் வரையறை இல்லை.

(அணிந்து ஏந்தி, தேர்ந்து உண்ணும், நிற்ப மாற்றியும் வழங்கியும் செகுத்தும் தாங்கியும் பணிய இருக்கும்; விரித்து, பூசி, சூடி, தோன்ற, இரந்து தைவந்து புலந்தும், களித்தும் இருக்கும்; நடாத்த, ஆக, எறிந்து, குழுமி

இருந்து ஆட நிகர்க்கும் கமலைக் கடவுள் நிற்றலின் இன்று என்று முடிவு செய்க.]

இறைவன் பல வேறு நிலைகளில் நின்று கோலம் காட்டினும் அவனுடைய நிலை இன்னதென்று வரையறுப் பதற் கொண்ணாதது என்பது கருத்து.

இது, திருவாரூர் நான்மணி மாலையில் வரும் 25 ஆவதுபாட்டு.

18666

# இதமான வாழ்வுக்கு எளிய வழிகள்

### குழந்தைகள் இரத்தப் போக்கிற்கு

1. தாழை விழுதின் சாறு, இளநீர் எமிச்சம் பழச்சாறு சமனாகக் கலந்து அதில் சுக்கு, சீரகம் வறுத்து பொடிந்த தூள்கலந்து கொடுக்க குணமாகும்.

### வயிற்றுப் பூச்சிகள் நீங்க

2. மாதுளை வேரின் பட்டையை எடுத்து கஷாயம் செய்து காலையில் 1 அவுன்ஸ் சாப்பிட்டு ஏதாவது ஒரு பேதி மருந்தைச் சாப்பிட பூச்சிகள் வெளியாகும்

### விக்கலை நிறுத்த

3. கடுக்காய்த் தோலை நன்கு தூள் செய்து தேன் கலந்து அருந்த விக்கல் நிற்கும்.

Dr. N. சடையப்பன் S M. P.


# திருக்கயிலைத் தோற்றம்

## மூவண்ணப்படம்

கிரயம் ரூ. 1/10

கிடைக்குமிடம் மேலாளர்,

ஸ்ரீ காசிமடம்

திருப்பனந்தாள்.

# பெண்ணாடத்தில் திருப்பனந்தாள் கயிலைமாமுனிவர் அவர்கட்குச் சிறப்புவரவேற்பும் பாராட்டும்

'மணிநீலகண்டம் உடையபிரான் மலைமகளுந்தானும் மகிழ்ந்து வாழும்' இக்கடந்தை நகருக்குத் திருப்பனந்தாள் காசி மடத்து அதிபர், கயிலைமாமுனிவர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள். துந்துபி ஆண்டு புரட்டாசித்திங்கள், நான்காம் நாள் (20-9-82) திங்கட்கிழமையன்று எழுந்தருளினார்கள். இந்து மதப் பெரியார்களையும் அடியார்களையும் சிறப்புச் செய்தில் விருப்ப முடையோராய் விளங்கும் இப்பகுதி மெய்யன்பர்களின் சார்பில் சுவாமிகளுக்கு, ''முத்துக் குமரர் பூங்காவில்'' சிறப்பு வரவேற்பும் பாராட்டும் அளிக்கப்பட்டது.

20-9-82 காலையில் கயிலைமாமுனிவர் புரட்டாசித்திங்கள் சுவாதி குருபூஜை விழாவில் கலந்து கொள்ள மெய்கண்டார் ஆலயத்திற்கு எழுந்தருளினார்கள். ஆங்குச் சிறப்பு வழிபாடு ஆற்றி அன்பர்களுக்கு அருட்பிரசாதம் வழங்கினார்கள்.

பின்னர் மாலையில் சுவாமிகள் நகர்வலம் மேற்கொண்டார்கள். சீர் உலவும் இச்செல்வத் திருநகரின் வீதிகளில் இல்லந்தோறும் பூரண கும்ப மரியாதையுடன் சுவாமிகளை வரவேற்றார்கள். அவர்கள் அனை வருக்கும் கயிலைமாமுனிவர் ஆசி வழங்கி அருளினார்கள். வழியில், 'செல்லும் நெறியாவும் சேமநெறி' யாகும் வண்ணம் அருள் புரியும் 'வீற்றிருந்த பெருமானை' வழிபட்டபின் சுவாமிகள் நகர்வலத்தைத் தொடர்ந்தார்கள் நகர்வலம் பிரளயகாலேஸ்வரர் ஆலயத்தை அடைந்தது. ஆலய வாயிலில் அறங்காவலர் திரு. ரெங்காசாரி, செயல் அலுவலர் திரு. P.கோதண்டராமன், சமயப்பேரவையின் தலை வர் திரு.ச.முத்துக்குமாரசாமிப் பிள்ளை ஆகியோர் பூரணகும்ப மரியாதையுடன் மாலை அணிவித்து சுவாமிகளை வரவேற்றார்கள். மருள் நீக்கி அருள் புரியும் சுடர்க் கொழுந்து நாதரை வழிபட்டு வந்திருந்தோர் அனைவருக்கும் காசிவாசி எஜமான் சுவாமிகள் அருட்பிரசாதம் வழங்கி ஆசி நல்கினார்கள்.

மாலை 7 மணியளவில் வரவேற்புக் கூட்டம் முத்துக்குமரர் பூங்காவில் நடைபெற்றது.

வரவேற்புக் குழுவின் சார்பில், இத்திருத்தலத்திற்கு எழுந்தருளிய கயிலைமாமுனிவரையும், விழாவிற் கலந்து கொள்ள வருந்திந்தோரையும் திரு. கொ.மு. தங்கவேல் பிள்ளை அவர்கள் வரவேற்றுப் பேசினார்கள்.

வரவேற்புக் குழுவின் சார்பாக வரவேற்புக் குழுத்தலைவர் திரு. ந. ஞானப்பிரகாசம் பிள்ளை அவர்கள் வரவேற்பு இதழ் படித்தளித்தார்கள்.

சமயப்பேரவையின் சார்பாக அதன் தலைவர் திரு .ச. முத்துக்குமாரசாமிப் பிள்ளை அவர்கள் வரவேற்பிதழ் படித்தளித்தார்கள்.

18666

கடந்தைத் தமிழ்ச் சங்கம், சிவகுருநாதன் கழகம் இவைகளின் சார்பிலான வரவேற்பிதழை திரு. புலவர் இரா. சிவப்பிரகாசம் படித்தளித்தார்கள்.

வரவேற்புக் குழுவின் சார்பில் துணைத்தலைவர் திரு. R. குஞ்சிதபாதம் பிள்ளை அவர்கள் சுவாமிகளுக்குப் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார்கள்.

வரவேற்புக் குழுவின் சார்பாக திரு. R. சீனுவாசம் பிள்ளை அவர்கள் மாலை அணிவித்து வரவேற்றார்கள்.

கயிலைகண்டு வந்த சுவாமிகளைப் பாராட்டி, திரு. புலவர் . எழிலன் B. A. அவர்கள், திரு. புலவர். இரா. சிவப்பிரகாசம் அவர்கள், திரு. க. வடிவேல் பிள்ளை M.A.L.T. அவர்கள், திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரி முதல்வர், திரு. கு. சுந்தரமூர்த்தி M.A. அவர்கள் திரு. சண்முகநயினார் ஆகியோர் பேசினார்கள்.

பாராட்டுக்குப் பின் சுவாமிகள் கயிலை கண்டு வந்த பயண அனுபவங்களைச் சீரிய வகையில் எடுத்துக் கூறி ஆசி வழங்கி அருளினார்கள்.

வரவேற்புக் குழுவின் செயலர் திரு. சிவ. பழமலை அவர்கள் நன்றி கூறினார்கள்.

இறுதியில் சுவாமிகள் கொலுக் காட்சி தந்து, ஆசி நல்கி அருளினார்கள்.

*************************

சிவ சிவ　சிவ சிவ　சிவ சிவ　சிவ சிவ　சிவ சிவ　சிவ சிவ

*************************

உ

சிவ சிவ

# மதுரையில்
# கந்தபுராணச் சொற்பொழிவுகள்

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் அதிபர்

**கயிலைமாமுனிவர் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி**

**முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்**

அருளாணையின் வண்ணம் நிகழ்த்தப்பெறுவது.

துந்துபி ஆண்டு ஐப்பசி 30உ முதல் கார்த்திகை 5உ முடிய [16-11-82-21-11-82] ஆறு நாட்கள். நாடோறும் மாலை 6-30முதல்

இடம்: தருமையாதீனத்திற்குச் சொந்தமான ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருமடம், வடக்கு மாசி வீதி, மதுரை.

சொற்பொழிவாளர் : திரு. சி. கோவிந்தராசனார்

[ஆராய்ச்சியாளர், தமிழியற் புலம்,
மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம்]

அருளாணையின் வண்ணம்,

ஸ்ரீ காசிமடம்
திருப்பனந்தாள்

முத்து. மெய்கண்டதேவன்,
மானேசர்.

*************************

சிவ சிவ　சிவ சிவ　சிவ சிவ　சிவ சிவ　சிவ சிவ　சிவ சிவ

*************************

சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ

உ

சிவ சிவ

# கந்தபுராணச் சொற்பொழிவுகள்

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் அதிபர்

கயிலைமாமுனிவர் ஸ்ரீலஸ்ரீ காவாசி

முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

அருளாணையின் வண்ணம் நிகழ்த்தப்பெறுவது.

துந்துபி ஆண்டு ஐப்பசி 30 ஆம் தேதி முதல்
கார்த்திகை 5ம் தேதி முடிய (16-11-82 — 21-11-82)
ஆறு நாட்கள்
நாடோறும் மாலை 6-30 முதல்

இடம்: காஞ்சிபுரம் குமரகோட்டம்
அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில்

சொற்பொழிவாளர்:
காஞ்சிபுரம் புலவர், ஆ. சித்திரவடிவேலு

நமரங்காள் வருக.

அருளாணையின் வண்ணம்,
முத்து. மெய்கண்டதேவன்,
மானேசர்.

ஸ்ரீ காசிமடம்,
திருப்பனந்தாள்.

சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ

# திருக்கணித பஞ்சாங்கம்

தி. கி. நாராயணசாமி, கடலூர். 1

துந்துபி ஸ்ரீ ஐப்பசிமீ (1982 அக்டோபர் — நவம்பர்)

திதி, நட்சத்திர காலம் முடியும் நேரம் (ரயில்வே மணிக்கணக்கில்)

| தமிழ்௳ | ஆங்கிலம்௳ | கிழமை | திதி | நட்சத்திரம் |
|---|---|---|---|---|
| 1 | (18—10—82) | திங்கள் | துதியை 5-57 | சுவாதி 18-57 |
| 2 | (19—10—82) | செவ்வாய் | திரிதியை நாள் முழுதும் | விசாகம் 20-23 |
| 3 | (20—10—82) | புதன் | திரிதியை 7-05 | அனுஷம் 22-25 |
| 4 | (21—10—82) | வியாழன் | சதுர்த்தி 8-49 | கேட்டை 24-59 |
| 5 | (22—10—82) | வெள்ளி | பஞ்சமி 11-05 | மூலம் 27-57 |
| 6 | (23—10—82) | சனி | சஷ்டி 13-40 | பூராடம் நாள் முழுதும் |
| 7 அக்டோபர்மீ | (24—10—82) | ஞாயிறு | சப்தமி 16-21 | பூராடம் 7-05 |
| 8 | (25—10—82) | திங்கள் | அஷ்டமி 18-50 | உத்திராடம் 10-08 |
| 9 | (26—10—82) | செவ்வாய் | நவமி 20-53 | திருஓணம் 12-52 |
| 10 | (27—10—82) | புதன் | தசமி 22-18 | அவிட்டம் 15-00 |
| 11 | (28—10—82) | வியாழன் | ஏகாதசி 22-58 | சதயம் 16-27 |
| 12 | (29—10—82) | வெள்ளி | துவாதசி 22-50 | பூரட்டாதி 17-08 |
| 13 | (30—10—82) | சனி | திரயோதசி 21-58 | உத்திரட் 17-05 |
| 14 | (31—10—82) | ஞாயிறு | ○ சதுர்த்தசி 20-28 | ரேவதி 16-22 |
| 15 | (1—11—82) | திங்கள் | பௌர்ணமி 18-27 | அசுவனி 15-06 |
| 16 | (2—11—82) | செவ்வாய் | பிரதமை 16-03 | பரணி 13-31* |
| 17 | (3—11—82) | புதன் | துதியை 13-26 | கிருத்திகை 11-39 |
| 18 | (4—11—82) | வியாழன் | திரிதியை 10-44 | ரோகிணி 9-40 |
| 19 | (5—11—82) | வெள்ளி | சதுர்த்தி 8-03<br>பஞ்சமி 5-30 | மிருகசீரிஷம் 7-44<br>திருஆதிரை 5-54 |
| 20 | (6—11—82) | சனி | சஷ்டி 27-09 | புனர்பூசம் 28-17 |
| 21 | (7—11—82) | ஞாயிறு | சப்தமி 25-04 | பூசம் 26-55 |
| 22 | (8—11—82) | திங்கள் | அஷ்டமி 23-16 | ஆயில்யம் 25-51 |
| 23 | (9—11—82) | செவ்வாய் | நவமி 21-47 | மகம் 25-05 |
| 24 நவம்பர்மீ | (10—11—82) | புதன் | தசமி 20-37 | பூரம் 24-38 |
| 25 | (11—11—82) | வியாழன் | ஏகாதசி 19-49 | உத்திரம் 24-33 |
| 26 | (12—11—82) | வெள்ளி | துவாதசி 19-22 | அஸ்தம் 24-50 |
| 27 | (13—11—82) | சனி | திரயோதசி 19-21 | சித்திரை 25-29 |
| 28 | (14—11—82) | ஞாயிறு | சதுர்த்தசி 19-46 | சுவாதி 26-36 |
| 29 | (15—11—82) | திங்கள் | ● அமாவாசை 20-40 | விசாகம் 28-11 |
| 30 | (16—11—82) | செவ்வாய் | பிரதமை 22-04 | அனுஷம் நாள் முழுதும் |

# சிவப்பிரகாசம்

தெளிவுரை

கு. சுந்தரமூர்த்தி எம். ஏ., திருப்பனந்தாள்

பிரேரக காண்டம்-செலுத்தும் இடம். மேற் கூறிய சிவதத்துவம் ஐந்துடன் நால்வகை வாக்குகள் ஐவகைக் கலைகள் சுத்தகாலம் முதலிய முப்பத்தொரு தத்துவங்கள் ஆகியனவும் இங்கிருந்தே தோன்றுவனவாம். இதனைச் சுத்தப் பிரபஞ்சம் என்றும் கூறுவர். இத் தூமாயையின் கீழ் அடங்கி அவற்றால் செலுத்தப்படும் மாயை தூவாமாயையாகும். இதனகத்து காலம் நியதி கலை வித்தை அராகம் மாயை புருடன் என்ற ஏழும் உளவாம். காலம் முதலிய மூன்றையும் சத்தி தத்துவமும், வித்தையைச் சுத்தவித்தையும், அராகத்தை ஈசுவர தத்துவமும், மாயையைச் சிவதத்துவமும், புருடனைச் சதாசிவதத்துவமும் இயக்கும். உயிர்களுக்குச் சிற்றறிவையும் சிறுதொழில்களையும் விளக்குதற்குக் கருவியாக நிற்றலின் தூய்மையும், நுண்ணுடம்பின் வழியாக இன்ப துன்பங்களை உண்டாக்குதற்குக் கருவியாக நிற்றலின் தூய்மை இன்மையும் உடையதாய் இருத்தலின் இதனைச் சுத்தாசுத்த தத்துவம் என்பர். சுத்த தத்துவங்களால் செலுத்தப் பட்டும் அசுத்த மாயையில் தோன்றியும் இருத்தல் பற்றிச் சுத்தாசுத்த தத்துவம் என்றும் கூறுவர். இவ்வாறு தூய்மையும் தூய்மை இன்மையும் கலந்திருத்தல் பற்றி மிச்சிராத்துவா என்றும் கூறுவர். மிச்சிரம்-கலப்பானது. உயிர்கட்கு உரிய நுகர்வைக் கொடுத்து நிற்றலின் இதனைப் போக காண்டம் என்றும் கூறுவர். உயிர்க்குச் சிற்றறிவை எழுப்பும் தத்துவங்களை எழுப்புதலின் வித்தியா தத்துவம் என்றும் கூறுவர். எண் மூன்று அசுத்தம் என்பது இருபத்துநான்கு தத்துவங்களும் அசுத்தம் என்னும் பொருளது. அவையாவன அறிகருவி ஐந்தும், தொழிற்கருவி ஐந்தும், புலன் ஐந்தும், பூதம் ஐந்தும், மனம் புத்தி சித்தம் அகங்காரம் ஆகிய நான்குமாம். இத்தத்துவங்கள் உயிர்கட்கு முக்குணங்களின் வாயிலாக இன்பதுன்பங்களையும் விருப்புவெறுப்புக்களையும் உண்டாக்குதலால் அசுத்த தத்துவம் எனப்படும். உயிரொடு இயைபுபட்டிருத்தலால் ஆன்ம தத்துவம் என்றும், நுகரப்படும் பொருளாய் இருத்தலால் போக்கிய காண்டம் என்றும் கூறுப. போக்கியம் – நுகரப்படும் பொருள். இம் முப்பத்தாறனுள் சுத்த தத்துவம் சிற்சத்திக்குச் சுதந்திர வடிவாகலின் அறிவுடைய தத்துவம் எனப்படும். புருட தத்துவம் சார்ந்ததன் வண்ணமாய் இருத்தலின் அறிவு அறிவின்மை

ஆகிய இருநிறத்திற்கும் உரியவாம் ஏனைய முப்பதும் அறிவற்றதாம். முன்னைய தோலை விடுத்துப் புதிதாக ஒரு தோலைப் பற்றுதல் பாம்பினது இயல்பாம். அதுபோல உயிர் பருவுடலை விடுத்து நுண்ணுடலைப் பற்றிச் செல்லும். அவ்வாறு பற்றிச் சென்ற வகையான் தான் செய்த வினைக்கு ஏற்ப இன்ப துன்பங்களை அனுபவிக்கும். முட்டையில் பிறக்கும் உயிரினங்கள் அதனை விடுத்துப் பின் வேறிடங்களில் வதியும். அதுபோல உயிரும் முன்பிருந்த பருவுடலாகிய இடத்தை விடுத்துக் கீழுலகில் பூதவுடலையும் மேலுலகில் பூதசாரவுடலையும் எடுத்துத் துன்ப இன்பங்களைத் துய்க்கும். நனவில் தெரிந்தது கனவில் தெரிவதில்லை. அதுபோலப் பருவுடலோடு செய்த செயல்கள் நுண்ணுடல் எடுக்கும் காலத்து உயிர்கள் அறிவதில்லை. உடல் மாற்றத்திற்குப் பாம்பும், இடமாற்றத்திற்கு முட்டையை விடுத்துக் கூடு சேரும் பறவைகளும், அறிவு மாற்றத்திற்குக் கனவும் உவமையாம்; உயிர் எடுக்கும் உடல்வகை மூவகைப் படும். இந் நிலவுலகில் வதியும் பொழுது உள்ள உடல் பூதவுடம்பு எனப்படும். மேலுலகில் சென்று இன்பினை அனுபவிக்கும் உடம்பு பூதசாரவுடம்பு எனப்படும். கீழுலகில் சென்று துன்பினை அனுபவிக்கும் உடம்பு யாதனுவுடம்பு எனப்படும்; தன் மாத்திரை ஐந்தும், மனம் புத்தி அகங்காரம் ஆகிய மூன்றும் கூடிய உடம்பு புரியட்டக உடம்பு எனப்படும். பூதம் ஐந்து, தன் மாத்திரை ஐந்து, அறிகருவிகள் ஐந்து, தொழிற் கருவிகள் ஐந்து, அகக் கருவிகள் மூன்று, குணம் ஒன்று, பிரகிருதி ஒன்று, கலை முதலிய ஐந்து ஆகிய எட்டும் புரியட்டகம் எனப்படும்; அவை முற்கூறிய எட்டினுள் அடங்கும். ஆதலின் 'கலாதிநிலை பரவிய சூக்குமம்' என்றார். சூக்குமமாம் தன் உரு - நுண்ணுடம்பாகிய தன் வடிவு. தன்னிலையில் (கேவலத்தில்) உயிர் அறிவு தொழிற்பாடு முதலிய எவையும் இன்றிக் கண்ணிலாக் குழவியைப் போல் கிடக்க இறைவன் அவ் உயிர்க்குக் குருடனுக்குக் கோல் கொடுப்பது போன்று நுண்ணுடம்பு ஒன்றை வழங்கியருளுவன்; இவ் உடம்பு வினை வயத்ததன்று. இது கொண்டே பின் வரும் உடம்புகள் உளவாகின்றன. இந் நுண்ணுடம்பு வீடுபேறுவரை உயிரை விட்டு நீங்காது. ஆதலின் 'சூக்குமமாம் தன் உருவில் நின்று' என்றார்.

### பிறப்பு வகை

47. தோற்றியிடும் அண்டங்கள் சுவேதசங்கள் பாரில்
துதைந்துவரும் உற்பிச்சம் சராயுசங்கள் நான்கின்
ஊற்றமிகு தாவரங்கள் பத்தொன்பது என்றும்,
ஊர்வபதி னைந்து, அமரர் பதினொன்றொடு, உலவா

மால்தருநீர் உறைவன நல் பறைவைகள், நால் காலி
மன்னியிடும் பப்பத்து, மாநுடர்ஒன் பதுமாக,
ஏற்றிஒரு தொகை ஆக இயம்புவர்கள் யோனி
எண்பத்து நான்குநூ ருயிரம்என்று எடுத்தே.

(தெ—ரை) இறைவனுல் தோற்று விக்கப் பெறும் பிறப்பு வகைகள் நான்காம். அவை முட்டையில் தோன்றுவன, வியர்வையில் தோன்றுவன, மண்ணில் ஆழ்ந்து முளைத்து வருவனவாய விதை, வேர் முதலியவற்றில் தோன்றுவன, கருப்பையில் தோன்றுவன என்பனவாம். இந் நான்கின் வாயிலாக வரும் பிறப்பு வகைகளில் தாவரம் பத்தொன்பது நூருயிரம் பிறப்பு வேறுபாடுடையன. ஊர்வன பதினைந்து நூருயிரம் பிறப்பு வேறுபாடு உடையன. தேவர்களின் பிறப்பு பதினெரு நூருயிரம் பிறப்பு வேறுபாடுடையன. குறையாத பெரும் பரப்பினதாய நீரில் வாழ்வன, நல்ல பறவைகள், நாற்கால் விலங்குகள் ஆகிய ஒவ்வொன்றும் பத்துநூருயிரம் பிறப்பு வேறுபாடுடையன. மானுடப் பிறப்பு ஒன்பது நூருயிரம் பிறப்பு வேறுபாடுடையன. இவ்வெழுவகைப் பிறப்பிலும் காணும் பிறப்பு வகைகளை ஒரு தொகையாகக் கூறின் எண்பத்து நான்கு நூருயிரம் என எடுத்துக் கூறுவர் பெரியோர்.

அண்டசம்— முட்டையில் தோன்றுவன. அண்டம் — முட்டை. சம்—பிறந்தது. பாம்பு, தவளை, முதலை, உடும்பு, மீன், பல்லி முதலியன இவ்வகையின. சுவேதசம்—வியர்வையிலிருந்து தோன்றுவன. சுவேதசம்—வியர்வை, விட்டில், பேன் முதலியன இவ்வகையன. உற்பிச்சம்—வித்து,வேர் முதலியவற்றில் தோன்றுவன. உற்பித் — மேல்பிளந்து தோன்றுவது. செடி, கொடி, மரம் முதலியன இவ்வகையின. சராயுசம்—கருப்பையில் தோன்றுவன. சராயு—கருப்பை. மனிதர், தேவர் முதலியோர் இவ்வகையினர். வினைக்கு ஈடாக இப்பிறப்பு வகைகள் இறைவனுல் தோற்றுவிக்கப் படுகின்றன. ஆதலின் தோற்றியிடும் என்றூர். தாவரங்கள் நிலையியற் பொருளாதலின்— 'ஊற்றமிகு' என்றூர். ஊற்றமிகு—நிலைபேறு மிகுந்த. மால்தருநீர்—பெருமைபொருந்திய நீர் உயிரினங்கட்கு உரிய உணவுகளை உளவாக்கியும், தானும் உணவாகியும் இருத்தல் பற்றி 'மால் தருநீர்' என்றூர். நிலத்தினும் நீர் பரப்புடையாததல் பற்றி இங்ஙனம் கூறினூர் எனினும் அமையும். நாற்காலி—நான்கு கால்களையுடையது: விலங்குகள் முதலியன. 'பப்பத்து மன்னியிடும்' என மாறுக. 'ஆக' என்பது ஈற்று உயிர்மெய் கெட நின்றது. ஏற்றி—இந்நால்

வகைத் தோற்றத்து எழு வகைப் பிறப்பு வகைகளையும் கூட்டி. யோனி—உடல்: வடிவு. இப்பாடற்படி தாவரம் — 19, ஊர்வன —15, தேவர்—11, நீர் வாழ்வன—10, பறப்பன—10, நடப்பன—10 மக்கள்—9, ஆக 84 இலக்கமாகும். ''ஊர்வ பதினொன்றும் ஒன்பது மானுடம், நீர்பறவை நாற்கால் ஓர் பப்பத்துச்—சீரிய, பந்தமாம் தேவர் பதினுன்கு அயன் படைத்த, அந்தமில்சீர்த் தாவரம் நாலைந்து'' எனப் பரிமேலழகர் உரையில் காட்டப்படும் பாடல் இதனினும் சிறிது வேறுபட உள்ளது. எனினும் மொத்தத் தொகையில் வேறுபடவில்லை. 'உரைசேரும் எண்பத்து நான்கு நூறுயிரமாம் யோனி பேதம்' என ஞானசம்பந்தரும், 'ஈரிரண்டு தோற்றத்து எழுபிறப்புள் யோனி எண்பான் ஆரவந்த நான்கு நூறுயிரத்துள்' எனக் குமரகுருபர அடிகளும் கூறுவன நினைவு கூரத்தக்கன.

## அருட் பதிவு நிகழும் காலம்

48. இனைய பல பிறவிகளின் இறந்து பிறந்(து) அருளால்
இருவினைகள் புரிந்(து) அருந்தும் இதுசகலம்; அகலா
முனம் மருவும் இருபயனும் ஒரு காலத்(து) அருந்த
முந்து நுகர் உந்துபயன் அந்தமுற வந்த
வினையும் எதிர் வினையும் முடிவினை உதவு பயனுல்
நேராக நேராதல் மேவுங் கால்முற்
சினமருவு திரோதாயி கருணை ஆகித்
திருந்தியசத் திநிபாதம் திகழும் அன்றே.

(தெ — ரை) இறைவனது திருவருளால் இவ்வாறுன பல பிறவிகளில் பிறந்து இறந்து நல்வினை என்றும் தீவினை என்றும் இருவினைகளைச் செய்து அவற்றுனுய இன்ப துன்பங்களைத் துய்த்து வரும் இந்நிலை கட்டு நிலை (சகலாவத்தை) யாம். துய்த்துத் தொலையாது முற்பிறவிகளில் பொருந்திய பழவினையின் (சஞ்சிதம்) பயனுகிய இன்ப துன்பங்களைத் துய்க்கும் அக்காலத்திலேயே அதாவது ஏன்ற வினையை நுகரும் காலத்தேயே, அதனோடு ஒருங்கு துய்க்கத் தக்கதாகிய முற்பிறவிகளின்வழி விளைந்த வினையையும் (பழவினை), ஏற்றுத் துய்ப்பதாம் காலத்தே, மேலும் விளைந்த வருவினையும் (ஏறும்வினை) சிவ புண்ணியப்பயனுல் ஒப்ப நோக்கும் இருவினை ஒப்பு ஏற்படும். அவ்வமையத்து இதற்குமுன் உயிர்களை ஈடுடேற்றுதற் பொருட்டு ஒறுத்து வந்த மறைப்பாற்றல் இதுபொழுது அருளாற்றலாக மாறி நிற்க மிகவுயரிய அருட்பதிவு உயிரிடத்துப் பொருந்தும்.

அருளால் இனைய பல பிறவிகளில் இறந்து பிறந்து, என மாறிக் கூட்டுக. முனம்: முன்னம்-முன்பு. அதாவது உயிர் கட்டு நிலையில் இருக்கும் பொழுதே. உயிர்க்கு முன்னம் நுண்ணுடம்பும்பின்பு பருவுடலும் தரப்படுகின்றன. அந் நுண்ணுடம்பு தருவதன் முன்னம் உயிர்க்கு விருப்பு வெறுப்புக்கள் உண்டாகின்றன, அவ்வாறு தோன்றுவதை மூல கன்மம் என்பர். அதன்வழி யுளதாகும் விருப்பு வெறுப்புக்களால் நலந் தீங்குகள் உண்டாகின்றன. அவற்றால் துன்ப இன்பத் துய்ப்பு நேருகின்றது. இவ்வாறு வருவினையால் பழவினையும், அப்பழவினையால் நுகர்வினையும் அந்நுகர்வினையால் வருவினையும் மாறி மாறி வந்து கொண்டிருக்கின்றன. இதற்கு ஒரு முடிவு தருவதே சிவ புண்ணியமாகும். அது புற [சரியை], அக [கிரியை], ஒன்றிய [யோக] வழிபாட்டினால் வருவதாகும். அப்புண்ணியத்தின் பயனாகக் குருவருளும் அக்குருவருளால் இருவினையொப்பும் மலவலிமை குன்றலும் ஏற்படும். அக்காலத்தே இறைவனின் அருட்பதிவு [சத்தினி பாதம்] உயிரிடத்து நிகழும். இருவினையொப்பாவது இன்பத்துள் இன்பம் விழையாமலும் துன்பத்துள் துன்பம் உறாமலும் இருப்பதாம். இந்நிலை இறைவனின் அருள்வயப்பட்டு நின்றால் அல்லது வாயாது. ‘நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே’ என ஆளுடைய அடிகள் அருளுவதும் காண்க. திரோதாயி-மறைப்பாற்றல். உயிரைப்பிணித்து நிற்கும் ஆணவமலம் குன்றும்வரை இம் மறைப்பாற்றல் மறக்கருணை செய்து வரும். அவ்வாற்றான் அம்மலம் வலி குன்றிய பின் அறக்கருணையாக மாறி அருள் செய்யும். அருட்பதிவு உயிர்களின் பக்குவத்திற்கேற்பநிகழும் அந்நிலை மிக மென்மை (மந்ததரம்), மென்மை [மந்தம்], விரைவு [தீவிரம்], மிகுவிரைவு[தீவிரதரம்] என நான்கு வகைப்படும் மிக மென்மையாக [மிகச்சிறிதாக]அருட்பதிவு பெற்றோர் சமய தீக்கை பெற்று இறைவனது உருவத் திருமேனியை வழிபடும் புறவழிபாட்டு [சரியை] நிலையில் நிற்பர். இதன் பயனாக, இதனினும் உயர்ந்த மென்மையான அருட் பதிவு உற்றோர் விசேட தீக்கை பெற்று அருவுருவத் திருமேனியை வழிபடுதலாகிய அகவழி பாட்டு நெறியில் (கிரியை) நிற்பர். அதன் பயனாக விரைவான அருட்பதிவு பெற்றோர் அருவுருவத் திருமேனியை வழிபடுதலாகிய ஒன்றிய நெறியில் நின்று (யோக நெறி) வழிபடுவர். இவற்றின் பயனாக மிக விரைவான அருள் விளக்கத்தைப் பெறுவர். இதுவே வீடுபேற்றிற்கு இலக்காக்குவது. ஆதலின் ‘இதனைத்திருந்திய சத்திநிபாதம்’ என்றார்.

49. நாடியசத் திநிபாதம் நாலு பாதம்
நண்ணும் வகை எண்ணரிய ஞான பாதம்

கூடுமவர் தமக்(கு) உணர்வாய் நின்ற ஞானக்
கூத்தன் ஒரு மூர்த்திகொடு குறுகி மோகம்
நீடியகே வலசகலம் நிகழாவாறு
நிறுத்திமலம் அறுக்கும், இதுநிலை ஆர் சுத்தம்;
கே(டு) இல்புகழ் தரும் சரியை கிரியா யோகக்
கேண்மையரேல் இவை உணர்த்தக் கிளக்கும் நூலே.

(தெ — ரை) முற் கூறப்பட்ட அருள் வீழ்ச்சி பொருந்தும் முறை நால் வகைப்படும். அவற்றுள் நினைத்தற்கரிய மிகு விரைவாம் அருள் வீழ்ச்சி பெற்றோர்க்கு இதுகாறும் அறிவுக்கு அறிவாய் நின்று உணர்த்தி வந்த ஞானக் கூத்தன் ஒப்பற்ற குரு மூர்த்தியாக, அவரிடத்து அணுக எழுந்தருளி மயக்கம் மிகுந்த தன் (கேவலம்) நிலையிலும், கட்டு (சகல), நிலைகளிலும் சேராதவாறு அருள் வயப்பட்டு நிற்குமாறு செய்து, அதற்குரிய மலங்களைப் போக்கியருளுவன். இந்நிலை பொருந்திய தூயநிலை (சுத்தாவத்தை) எனப்படும். கேடில்லாத புகழைத் தருகின்ற புறஅக ஒன்றிய வழிபாடு செய்து அவற்றின் பயனாக விளையும் சிவ புண்ணியக் கேண்மை யுற்றோர்க்கே இவ்வருள் பதிவு உளவாகும் என அருள் நூல்கள் நவிலும்.

நாலு பாதம்-நான்கு வகை. இறைவன் என்றும் உயிரிடத்துப் பொருந்தி நிற்கின்றான். அறிவுக்கு அறிவாக மறைந்தருளும் இறைவன் உயிர் தகுதிபெற்று உயரும்நிலையில் குருவாக முன் வந்து அருளுகின்றான். ''அறியாமை உள்நின்று அளித்ததே காணும் குறியாகி வந்த எங்கோ,'' என்னும் திருவருட்பயனும். உயிர் தன்நிலையிலும் கட்டு நிலையிலும் மயங்கியே நிற்கும். தன்னிலையில் காரிட்ட ஆணவக் கருவறையில் கட்டுண்டு இருந்து கண்ணிலாக் குழவியைப் போல் மயங்கி நிற்கும். கருவி கரணங்களோடு கட்டப்பட்ட கூட்டு நிலையிலும் பொருள் அல்லவற்றைப் பொருளென்று உணர்ந்து மயங்கி நிற்கும். 'மையல் மானுடமாய் மயங்கும்வழி ஐயனே தடுத்தாண்டு அருள் செய்க' எனச் சுந்தரர் வேண்டிக் கொண்ட விண்ணப்பமும் ஈண்டு நினைவு கூரத்தக்கது. இவ்வாறு இரு நிலையிலும் உயிர்க்கு மயக்கம் மிக்கு இருத்தலின் 'மோகம்நீடிய கேவல சகலம்' என்றார். உயிர் வீடு பேறு அடைவதே கேடில் புகழாம். எஞ்சிய புகழ்கள் எல்லாம் ஒரு ஞான்று இருந்து பிறிதொரு ஞான்று மாறும் நிலையன. இப் பெரும் பேற்றிற்கு ஆளாக்குவதற்குப் புற வழிபாடு முதலிய மூன்றுமே துணை ஆதலின் 'கேடில் புகழ் தரும் சரியை, கிரியா, யோகம்' என்றார்.

## 79. சமாதான சாஸனங்கள்

ஒரு பெரும் பகைமையை எப்படியோ ஒட்டுப்போட்டு சமாதானம்
செய்து வைத்தால் ஒரு சிறிதளவு பகைமை பின்தங்கித்தான்
போய் விழும்

இதை எப்படி திருப்திகரமானது என்று கருதலாம்?
ஆகையால் மெய்ஞானியானவன் இரு பகைவருள் உண்டான
சமாதானத்தில் கீழான நிலைமையை வகிக்கிறுன்,
எதிர்க்கட்சியின் மேல் குற்றத்தைச் சாற்றுவதில்லை.
நற்பண்புள்ள மனிதன் எப்படியாவது சாமாதானம் செய்து வைக்க
வேண்டும் என்று கருதுகிறுன்,
தீயவன் குற்றத்தை எதிரியின் முன்னே சாற்றுவதற்கு
முன் நிற்கின்றுன்

ஆனுல் இறைவனின் பாரபட்சம் அல்லாதது
அது நல்லவர்கள் பக்கத்தில்தான் சேர்கின்றது.

7 – ஆம் பாகம் பழமொழிகள்

## 80. சிறிய மனேராஜிய நாடு

ஒரு சிறிய ஜனத்தொகை கொண்ட ஒரு சிறிய நாடு ஒன்று
இருப்பதாகக் கொள்வோம்.
அங்கே தேவைகள் பத்து மடங்காக, நூறுமடங்காக இருக்கின்றன;
அவர்கள் பயன்படுத்தக் கூடிய அளவுக்கு அதிகமாகவே
இருக்கின்றன.
அந்நாட்டு மக்கள் தங்கள் உயிர்களை மதிப்பார்களாக; அந்நாட்டை
விட்டு தொலைவு நாடுகளாக குடிஏருதவர்களாக
இருப்பார்களாக
அங்கே படகுகளும் வண்டிகளும் இருந்தாலும் கூட அவற்றில்
ஏறி சவாரி செய்ய யாருமில்லை
போர்க்கவசங்களும் ஆயுதங்களும் இருந்தாலும் அவற்றை
பிறருக்குக் காட்சி அளிக்கச் சந்தர்ப்பமே கிடையாது.
அந்நாட்டு மக்கள் வாங்குவது விற்பது சம்பந்தமாக கணக்கு
வைத்துக் கொள்வதற்கு மீண்டும் கயிற்றில் முடிச்சுப்போடும்
வழக்கத்தைக் கைக்கொள்வார்களாக;

அவர்கள் உணவை இன்பத்துடன் உண்ணட்டும்
ஆடைகளை அழகாக அணியட்டும்
தங்கள் இல்லங்களைக் கொண்டு திருப்தியடையட்டும்
தங்கள் பழக்க வழக்கங்களை மகிழ்ச்சியுடன் கடைப்பிடிக்கட்டும்
அந்நாட்டவர்களுக்கு அக்கம்பக்கத்தில் உள்ள நாட்டவர்கள்
இவர்கள் என்ன செய்கிறார்கள் என்று பார்க்கமுடியும்;
ஆகையினால் அவர்களுடைய அக்கப்பக்கத்தவர்களின் சேவல்கள்
கொக்கரிப்பதையும் நாய்கள் குரைப்பதையும்
இவர்கள் கேட்கலாம்
அந்நாட்டு மக்கள் அவர்களுடைய இறுதி நாட்கள் வரையில் தங்கள்
நாட்டைவிட்டு வெளியே சென்றிருக்கமாட்டார்
(இது லௌட்ஸீ என்ற மெய்ஞானி கற்பனை செய்யும் சிறப்பு
வாய்ந்த சிறு நாடு)

## 81. இறைவனின் நெறி

உண்மையான சொற்கள் ஆடம்பரமான சொற்களாய் இருக்கா;
ஆடம்பரமான சொற்கள் உண்மையாக இருக்க மாட்டா.
ஒரு நல்ல மனிதன் தர்க்க வாதம் செய்யமாட்டான்;
எவனொருவன் தர்க்கவாதம் செய்கின்றானோ அவன்
நல்ல மனிதன் அல்லன்
அறிவாளி பல விஷயங்களைப் பற்றித் தெரிந்து வைத்திருக்க மாட்டான்
எவனொருவனுக்குப் பல விஷயங்கள் தெரிந்திருக்கின்றனவோ
அவன் அறிவாளி அல்ல
மெய்ஞானி தனக்காக பொருள் சேகரித்து வைப்பதில்லை:
அவன் மற்றவர்களுக்காக வாழ்கிறான்,
(அதனால்) அவன் செல்வந்தன் ஆகிறான்;
அவன் இதர மக்களுக்கு வழங்குகிறான்,
அதனால் அவனிடம் பொருள் மிதமிஞ்சி இருக்கிறது;
வானத்தில் உறையும் பிரம்மம்(டௌ)
மக்களை வாழ்த்துகிறது, ஆனால் தீமை செய்வதில்லை.
மெய்ஞானியின் நடைமுறை யாதெனின்
காரியத்தைச் சாதிப்பான், ஆனால் எவருடனும்
போட்டியிட மாட்டான்
லௌட்சீயின் மெய்ஞானநூல் முற்றிற்று.

# யார் குற்றவாளி

18666

முந்தைய வினையின் பயனைத் துய்க்க பிறவியெடுக்கின்றோம் நாம். எடுத்த உடலைப் பாதுகாக்க உண்ணவும் உறங்கவும் உடைகளை உடுத்திக் கொள்ளவும் செய்கின்றோம். அத்துடன் நடக்கிறோம்; நிற்கிறோம்;படுக்கின்றோம். இளமை யுடையவராக இருக்கின்றோம் முதுமையடைகின்றோம் பின் இறக்கின்றோம். இவ்வாறான வாழ்க்கையின் படிநிலைகளில் நாம் பலருடனும் பழகுகின்றோம். அவர்களுக்கும் நமக்கும் கடமைகளில், செயலாற்றலில் ஒப்புமை காணப்படுவது போலத் தோன்றும். அவ்வாறு தோன்றினாலும், உண்மையில் ஒப்புமை கிடையாதென்றே சொல்லலாம். உடலமைப்பு, நினைவு, பேச்சு, செயலாற்றல், நடை, உடை, பாவனை ஆகிய எல்லாவற்றிலும் ஒருவர்க்கும் மற்றொருவருக்கும் இடையில் குறைந்தபட்ச வேறுபாடாவது இருக்கும். அது, கூர்ந்து நோக்குவார்க்கே புலனாகும். இரட்டையர்களைக் (Twins) கண்டே அடையாளம் தெரியாது துன்புறுகின்ற நமக்கு, உலகில் உள்ளார் அனைவரிடத்தும் வேற்றுமையேஇல்லை. யெனில் அதனால் வரும் குழப்பம் அளவிட முடியாதது. எனவே எல்லாவிதமான அம்சங்களிலும் [aspects] இரண்டு வகைக்குக் குறைபாத வேறுபாடுகளைக் காண்கின்றோம்.

இயல்பாக வாழ்ந்து வரும் இவ்வாழ்க்கையில் சில இடங்களில், நேரங்களில் தவறுகின்றோம்; அதனால் துன்புறுகின்றோம். தவறுகின்ற நிலைமைக்குக் காரணத்தை நாம் ஆராய்வதில்லை. நாம் செய்த குற்றத்தை - தவறை -முதலில் நாம் குற்றமென்றே உணர்வதில்லை; ஒப்புக்கொள்வதுமில்லை .குற்றம் வரும் வழியை இரண்டாகக் கூறலாம். ஒன்று தெரிந்து செய்வது. தெரியாது செய்வது மற்றொன்று.

புலவர்:
முருகு. சுவாமிநாதன்,
எம். ஏ. பி. லிட்.,

குற்றம் எவ்வகை ஆயினும் அதனைப் பிறர் மேல் சாட்டவோ, அல்லது குற்றமில்லை என்று நிலைநாட்டவோ முயல்வதுதான மனித இயல்பு; திருடுகின்றவன் தான் அகப்படாத வரையில் பிறரைக் குற்றவாளியாகக் கூறுவான்; அல்லது,வயித்துக்கு இல்லை

திருடினேன்: ஏன் என்னைத்தவிர வேறு யாருமே திருடலையா?" என்று தன்னுடைய தவற்றுக்குக் காரணம் கற்பிக்கவும், அதை திசை திருப்பவுமே முயலுவான். ஒரே குற்றத்தைச் செய்கின்ற இருவரும், அகப்படும்போது நீதான் குற்றவாளி; என்று, ஒருவரையொருவர் கூறிக்கொள்வர். 'யார் குற்றவாளி' என்பதில் ஒருவருக்கொருவர் சச்சரவு மூளும்;

இது சாதாரண மாந்தரின் இயல்பாகும். ஆன்மீக வாழ்வில் மூழ்கி விட்ட அறிஞர்களோ பிறர் செய்த தவறுகளைத் தன்மேல் போட்டுக் கொள்வார்கள். தான் செய்யாத தவறுகளைத்தான் செய்ததாகக் கூறிக்கொண்டு அதற்காக வருந்துவார்கள். அவர்களின் அன்புள்ளத்துக்கு இதுவும் சான்றாகும். தான் செய்த தவறைப் பிறர்மேல் போடுவது; தான் தான் செய்யாத தவறையும் தான் செய்ததாக ஏற்பது; என்னும் இரண்டு இயல்புகளைக் கண்டநாம், மற்றொரு விந்தையான இயல்பையும் காணலாம்.

பெண்ணொருத்தியின் மேல் இயல்பான அன்பு கொண்டான் ஒரு ஆண்; வேட்கைமிகுதியால் மறைமுகமாக அவளைக் குற்றம் சாட்டுகிறான் 'உன்மேல்தவறில்லை உன்னை வெளியில் செல்லவிட்ட உன்னுடைய பெற்றோரும் தவறு செய்யவில்லை; அரசன் தன்னுடைய யானை ஆற்றுக்குச் செல்லுங்கால் அதனால்பிறருக்குத் துன்பம் வரக்கூடாது என்பதற்காக 'பட்டத்து யானை வருகிறது அனைவரும் ஒதுங்குங்கள்' என்று முரசறையச் செய்வான். அவ்வாறுசெய்யாமல் உன்னைத் தெருவில் நடமாட விட்ட அரசனே தவறு உடைபவன் எனக்கூறுவதை இலக்கியத்தில் காண்கிறோம்.

"நீயும் தவறிலை நின்னைப் புறங் கடைபோதர விட்ட நுமரும் தவறிலர், நிறையழி கொல் யானை நீர்க்கு விட்டாங்குப், பறையறைந் தல்லது செல்லற்க என்னா, இறையே தவறுடையான்'' என்பது இலக்கியம்.

குற்றம் செய்வார் பலரது மனப் பாங்குகளைக் கண்ட நாம், இறைநெறியில் ஆட்படாது குற்றம் புரிகின்றவருக்காகவருந்துகின்ற அடியார் ஒருவரின் பேச்சுரையைக் கேட்கலாமா அருள்நெறியில்தலைப் பட்ட பட்டினத்து அடிகள் அவ் இறைமாட்சியை உணராது திரிகின்ற பிறரைக் கண்டு இரங்கிக் கூறுகின்றார். அவர்களின் குற்றத்தைச் சுட்டிக் காட்டுகின்றார்;

அறுசுவைகளும் நிரம்பிய உணவு; உரியமுறையில் முதிர்ந்து இனிக்கின்ற முக்கனிகளும் இருக்கிறது. பசியோ அழிபசியாக

வருத்துகிறது. ஆனாலும் உண்ண வில்லை. உண்ணுதிருப்பதனால் குற்றம் யாருடையது? உணவினுடையதா? இல்லை, பசித்தவனின் குற்றம்தான்.

முறியாப் பெறுக்கன் முப்பழங் கலந்த
அறுசுவை அடிசில் அட்டினி திருப்பப்
புசியா தொருவன் பசியால் வருந்து தல்
அயினியின் குற்றம் அன்று.

நாஉலர்ந்து தண்ணீர் உண்ண வேண்டும் எண்ணும் வேட்யுடைய ஒருவன்; அவனுக்கு முன்னே தண்ணீர் இருக்கின்றது. அது எப்படிப் பட்டது? காய்ச்சி வடித்த [distilled water] நீர் போலத் தூய்மையானது. வெய்யிலில் வைத்து ஆற்றப் பட்டது; தெளிந்தது; இப்படிப்பட்ட தூய நீர்எதிரே இருக்கும் போதும் அவன் நீரைக் குடிக்கவில்லை. அது அவனுடைய குற்றமேயன்றி நீரின் குற்றமில்லை.

———— வெயிலின்வைத்
தாற்றிய தெண்ணீர் நாற்றமிட் டிருப்ப
மடாஅ ஒருவன் விடாஅ வேட்கை
தெண்ணீர்க் குற்றம் அன்று

அழகான சோலை; வண்ண வண்ண மலர்கள் பூத்துக் குலுங்குகின்றன; அம்மலர்களிலிருந்து தேன் சொரிகின்றது; மகரந்தங்கள் சிந்துகின்றன. மணல் நிரம்பிய சோலை; இப்படிப்பட்ட பூஞ்சோலை இருக்கும் போது அதன் நிழலில் தங்கி இன்பம் அனுபவிக்காது ஒருவன் நட்ட நடுப்பகலில் வறண்ட பாலையில் வெயிற் கொடுமையால் புள்ளியாக வியர்க்க அடி பெயர்த்து நடந்து செல்கின்றான் இங்கு யாரது குற்றம்? நிழலின் குற்றமல்லவே? நடப்பவனின் குற்றம் தான்.

————கண்ணகன்று
தேந்துளி சிதறிப் பூந்துணர் துறுமி
வாலுகங் கிடந்த சோலை கிடப்ப
வெள்ளிடை வெயிலில் புள்ளிவெயர் பொடிப்ப
அடிபெயர்த் திடுவான் ஒருவன்
நெடிது வருந்துதல் நிழல்தீங் கன்றே.

இவ்வாறாக உதாரண வகையால் குற்றம் செய்கின்றவர்களை அடையாளம் காட்டுகின்றார் அடிகள்.

இறைநெறியின் மகத்துவத்தை —இன்பத்தை உணராதார் இருக்கையில் அது இறைவனின் குற்றமாகுமா? ஆகாதல்லவா? எனவே தான்,

"மருதிடங் கொண்ட மருத வாண
நின்னது குற்றம் உளதோ."

என்கிறார்.

அப்படியாயின் யார்தான் குற்றவாளி? அதற்கு விடை வேண்டுமே! இறைவன் மலர

டியை நினைந்து இடையில் வருகின்ற இடர்களைக் கடக்கலாம். பாசம் வீசும் காலனை வதைக்கலாம்; பிறப்பையும் இறப்பையும் நீங்கிப் பேரின்பம் பெறலாம். காமதேனுவின் கன்றென துள்ளித் திரியலாம்; இப்படிப்பட்ட வாய்ப்புகள், வசதிகள் இருக்கையில் அவனருளாலே அவன்தாள் வணங்காத பாவியர்களே குற்றவாளிகள்! என்று தீர்ப்புக் கூறுகின்றார் அடிகள்.

——————நின்னினைந்து
எண்ணருங் கோடி இடர்ப்பகை
கடந்து
கண்ணுறு சீற்றத்துக் காலனை வதை
யாது
இறப்பையும் பிறப்பையும் இகந்து
சிறப்பொடு
தேவர் ஆவின் கன்றெனத் திரியாப்
பாவிகள் தமதே பாவம்.

[திருவிடை.மும்.கோவை]

மற்றைய குற்றங்கள் மன்னிக்கப்படலாம், இறைவனடி மறத்தலாகிய குற்றம் மன்னிக்க முடியாதது; எனவே அவற்றைப் 'பாவம்' என்று குறிப்பிட்டார் அடிகள்.


Phone No: 222 Tel. Add. "JEWELLERY"
T. N. G. S. T. No. 209126. Post Box No. 14
L. No. 8/77. Residence Phone No: 622

தரம் மிக்க தங்க நகைகளுக்கு

நடராஜ விலாஸ்

ஜுவல்லரி ஹால்

சிதம்பரம்

முகவரி

செ. ரெத்தினசாமி செட்டியார் சன்ஸ்.

உரிமையாளர்கள்:

நடராஜ விலாஸ் ஜுவல்லரி ஹால்
26, 27, 28, கடைத்தெரு, சிதம்பரம்.
தென்னார்க்காடு மாவட்டம் — 608 001.

# தமிழ்நாடு சைவவேளாளர் சங்கம்

## தஞ்சை மாவட்டம்

18666

3—10—82 ஞாயிற்றுக்கிழமை மாலை குடந்தைக் கிளையின் நிர்வாகக்குழுக்கூட்டம் துணைத்தலைவர் திரு உத்திராபதி தேசிகர் இல்லத்தில் தலைவர் திரு P. வைத்தியநாத பிள்ளை தலைமையில் கூடியது. கீழ்க்கண்ட தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

1. திருவானைக்காவல் அருள்மிகு அகிலாண்டேஸ்வரி திருக்கோவிலில் சைவ சமயத்தவரல்லாத சங்கராச்சாரியார் உருவச்சிலை ஒன்றை சைவ சமயப்பெருங்கோவிலாகிய இத்திருக்கோவிலில் அமைக்க சிலர் முயன்று கொண்டு இருப்பதாகத் தெரிய வருகிறது. இம்முயற்சியை இக்கூட்டம் வன்மையாக எதிர்க்கிறது.

2. தஞ்சை மாவட்டத்தில் வாடிவரும் நெற்பயிரைக் காக்க தமிழக முதல்வர் எடுத்துவரும் முயற்சிக்கு இக்கூட்டம் நன்றியைத் தெரிவித்துக் கொண்டும் தேவையான காவிரி நீரை கர்நாடக அரசிடமிருந்து பெற்று நெற்பயிரைக் காக்க முதல்வர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறது.

3. சங்கத்தின் சார்பாக சைவ நெறி செய்தித்தாளுக்கு ரூ 200/ம் மாலைமுரசு ஊழியர் நிதிக்கு ரூ 50/ம் நன்கொடை வழங்கியதற்கு இச்சங்கம் மாநிலத்தலைவர் திரு N. காங்கேயன் பிள்ளை அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறது.

4. நடப்பு ஆண்டில் உறுப்பினர் எண்ணிக்கையை 500ஆக உயர்த்த தேவையான முயற்சியினை எடுக்க வேண்டுமென்று தீர்மானிக்கின்றது.

# ஆலய பூஜை படிக்காசு நிதிக்கு

## நன்கொடை அளித்த அன்பர்கள் விபரம்

**5-8-82 வரை கூடுதல் ரூ. 14355 -10**

செப்டம்பர்மீ

| | | |
|---|---|---|
| 1. | மயிலாடுதுறை S.தங்கப்பன். | 10-00 |
| 2. | சிதம்பரம். ஒருவர். | 5-00 |
| 3. | சென்னை திரு.S.R.வேங்கட்ராமன்: | 5-00 |
| 4. | K.V.S.S கல்லூரி பேராசிரியர் திருT.M வெள்ளைவாரணம். | 10-00 |
| 5. | ஆச்சிராமம் பா கனகசபாபதி பிள்ளை | 51-00 |
| 6. | ,, இராமநாத அய்யர் | 25-00 |
| 7. | ,, சிதம்பரதாணு பிள்ளை | 10-00 |
| 8. | ,, S.சுப்புலெட்சுமி. | 5-00 |
| 9. | ,, D.S.வேலாயுதம் பிள்ளை. | 5-00 |
| 10. | ,, A.வீரலெட்சுமி. | 5-00 |
| 11. | துர்க்காகுடில் அப்பு (கும்பகோணம்) | 5-00 |

அக்டோபர்மீ

| | | |
|---|---|---|
| 1. | K V.S.S கல்லூரி பேராசிரியர் T.M.வெள்ளைவாரணம். | 10-00 |
| 2. | சென்னை S.R. வேங்கடராமன். | 5-00 |
| 3. | கும்பகோணம் துர்க்காகுடில் அப்பு. | 5-00 |
| 4. | நெய்வேலி காந்திமதி ராதாகிருஷ்ணன் | 50-00 |
| | ஆகக் கூடுதல் | **14561-10** |

## மழை வேண்டி...

**6-10-82** அன்று திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்திற்குச் சொந்தமான ஐராவத விநாயகர் ஆலயத்தில் சங்கட ஹர சதுர்த்தி நன்னாளில் மகா கணபதி ஹோமம் நடைபெற்றது, 108 தேங்காய் சிதர் விடப்பெற்றது.

"வான்முகில் வழாது பெய்க"

# ஸ்ரீலஸ்ரீ காசிவாசி கயிலைமாமுனிவர் அவர்கட்குக் கோவைமுதலிய நகரங்களில் வரவேற்பு

26-9-82 ஞாயிறன்று கோவை மாநகரில், கயிலாய யாத்திரை மேற்கொண்டு அருள் நலம் செழிக்க எழுந்தருளியுள்ள ஸ்ரீலஸ்ரீ காசிவாசி எஜமான் சுவாமிகள் அவர்கட்குச் சிறந்ததொரு வரவேற் பளிக்கப் பெற்றது.

கோவை விஸ்வ இந்து பரிஷத் அன்பர்களும், குருஞான சம்பந்தர் இறை பணி மன்ற அன்பர்களும், இரத்தின விநாயகர் கோயில் அறங் காவல் குழுவினரும் மற்றும் முப்பத்து நான்கு மன்றங்களின் அன்பர் களும் இவ்வரவேற்பு ஏற்பாடுகளைச் செய்தனர்.

இவ்வரவேற்பு வைபவத்தில் பல்லாயிரக்கணக்கான நல்லன்பர்கள் கலந்து கொண்டு விழாவை மிக்க பொலிவு பெறச்செய்தனர்.

கௌமார மடாலயம் தவத்திரு சுந்தரம் அடிகளார் தலைமையில் பாராட்டுவிழா நிகழ்ந்தது.

கயிலாய யாத்திரை மேற்கொண்ட ஸ்ரீலஸ்ரீ காசிவாசி கயிலைமாமுனிவர் அவர்கட்கும் காஞ்சிபுரம் ஆதீனம் கயிலைப்புனிதர் சீலத்திரு மகா சன்னிதானம்அவர்கட்கும் பேரூர் கயிலைப்புனிதர் தவத் திருசாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்கட்கும் பாராட்டு நிகழ்த்தப் பெற்றது.

மாண்புயர் நீதிபதி செங்கோட்டு வேலன் அவர்களும்குன்னூர் தவத்திரு இராமசாமி அடிகளார் அவர்களும் மற்றும் பலரும் பாராட்டுரை நிகழ்த்தினர்.

அன்று இரவு தென்னமநல்லூரில் திரு: சண்முகம் அவர்களின் ஏற்பாட்டில் நிகழ்ந்த பாராட்டு விழாவிலும் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி கயிலைமாமுனிவர் அவர்கள் கலந்து கொண்டு அருளுரை வழங்கினார் கள்.

27 அன்று அவிநாசியில் வழிபாடு நிகழ்த்திக் கொண்டு அங்கு நிகழ்ந்த பாராட்டையும் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி எஜமான் சுவாமிகள் அவர்கள் ஏற்றருளினார்கள். அன்று மதியம் வேலம்பாளையம் திரு சாமிநாத செட்டியார் அவர்கள் இல்லத்தில் மகேஸ்வர பூஜை சிறப்பாக நடைபெற்றது.

28 அன்று ஈரோட்டில் அருள்நெறித் திருக்கூட்டத்தாரும் மற்ற மன்றத்தினரும் மாபெரும் பாராட்டு நிகழ்த்தினர். அவ்விழாவில் தவத்திரு. குன்றக்குடி அடிகளார், திருவாரியார் சுவாமிகள் ஆகியோரும் மற்றும் பல அறிஞர்களும் பாராட்டுரை நிகழ்த்தினர்.


உ

# 'ஸ்ரீ குமரகுருபரர்'

## சமய இலக்கியத் திங்களிதழ்

அன்பமை நல்லீர்,

வணக்கம். தங்கள் சந்தா முடிவடைந்ததும் அன்புகூர்ந்து சந்தாத் தொகையனுப்பிப் புதுப்பித்துக் கொள்வதோடு. தொகை அனுப்பும் பொழுது 'சந்தா எண்ணைக் குறித்தும், சந்தாஎண் நினைவில்லையெனின் 'தொடர் சந்தா' என்று எழுதியும் உதவ வேண்டுகிறேன்.

ஆண்டுச்சந்தா ரூ. 7-50 ❀ ஆயுட் சந்தா ரூ. 100

நன்றியுடன்,
நிர்வாக ஆசிரியர்,
**ஸ்ரீ குமரகுருபரர்,**
ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள்.
612 504, தஞ்சை மாவட்டம்.

# திருவிளையாடல் புராணம்

உரைநடை

மகளிர் நீராடிக் கரையேறித் தங்களை அலங்கரித்தல்

இவ்வாறு தாங்கள் உடலில் பூசிய கத்தூரியையும், சந்தனத்தையும், தரித்த பூமாலைகளையும், முத்து மாலைகளையும் பொய்கைக்குக் கொடுத்துத் தங்கள் மேனியில் தாமரைமலரின் மணம் கமழ, இளம் பெண்டிர் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் அன்புள்ள ஆடவருடன் கரையேறினர்.

சில மகளிர் நனைந்த மெல்லிய ஆடையுள்ளே உடல் உறுப்புக்கள் யாவும் தோன்றலால் கரை ஏற வெட்கித் தங்கள் தங்கள் காதலரைக் கூவி, ''ஐயனே ! பொன்னுடையினை அளிப்பாய்'' என்று கேட்ட, அவர்கள் கண்ணனைத் துகில் அளிக்குமாறு கேட்கும் இடைச் சிறுமியரை ஒத்தனர்.

பொய்கைகள், செப்பஞ்சுக் குழம்போடு குங்குமமும் கலந்து சிவந்த நீரினையுடையனவாய், நீராடிக் கரை ஏறியவர்க்கு அமைத்த நீராஞ்சனம் (ஆலத்தி) எடுக்கும் வடடக்கலத்தினை ஒத்தன. பொய்கையினைச் சுற்றியுள்ள சோலைகள் அவற்றைச் சுற்றி நிற்கும் மகளிரை ஒத்தன.

பட்டாடை, பலநிறப் பருத்திநூலாடை, இரத்தினாபரணம், சந்தனம், கத்தூரி, குங்குமக் குழம்பு, பூமாலை இவை தங்கள் கட்டழகு முழுதையும் கவர்ந்து கொள்ள, மகளிர் தங்களை அலங்கரித்து ஆடவர்களின் உள்ளமனைத்தையும் கவர்ந்தனர்,

புதுத் தேன் நுகர்தல்

தோழிகள், பொன்னாலும் வெள்ளியாலும் பளிங்கினாலும் செய்யப்பட்ட கிண்ணங்களிலே புதுத் தேனைக் கூரிய வாளை நட்டாற்போல வார்த்துக் கொடுக்க, நங்கையர்கள் வாங்கித் தம் விரலாலே தேனை ஒரு துளியெடுத்துத் தெளித்து வண்டுகளை ஒட்டி விட்டுக் கோவைக்கனி போன்ற வாயில்வைத்து அருந்தினர்.

கள்ளினை நுகர்ந்து மதி மயங்கிய ஒரு பெண், இன்னும் கள்ளினைப் பருகுதற் பொருட்டு ஒரு பொற்கிண்ணத்தில் வார்க்கின்ற கள்ளின் தாரையை 'வாட்படை' என்று கருதி

''அறிவில்லாதவளே! வாட்படையினுல் கிண்ணத்தைச் சிதைக்கின்றுயோ'' என்று தோழியைப் பார்த்துக் கூறிச் சிரித்தாள்.

யாம் வறியம் என்று பலரிடத்தும் பலகாலும் இரந்திரந்து வறுமை நீங்காமல் மனஞ்சுழன்று அலையும் வறுமையுடையோர் ஒரு புதையலைக் கண்டால் யாவர் அகற்றினும் அதனை விட்டு அகல்வரோ? அகலார்; அதுபோலப் பூக்கள் தோறும் சென்று சிறு சிறு துளியாகத் தேனை நக்கித் திரிகின்ற வண்டுகள், மது உண்ணும் மகளிர் தம் கையால் ஓட்டவும் ஓடாமல் பெரிய மதுச் சாடியைத் தழுவி மொய்ப்பனவாயின.

மதுவைப் பருகி மயங்கிய ஒரு பெண் தன் கைக்கிண்ணத்திலுள்ள மதுவில் தோன்றும் தன் முகத்தையும் கண்களையும் கண்டு, ''தாமரை மதுக் கடலிலே மூளைந்தது; அதிலுள்ள தேனை நிறையச் சுற்றி உண்ணுத பேதை வண்டுகள், அத் தேனின் சிறு துளியைச் சூழ்கின்றதே'' என்று குலுங்கச் சிரித்தாள். வேருெரு பெண், தான்உண்டு மிகுந்த கள்ளினுள் பிரதிபலிக்கும் சந்திரனை நோக்கி, 'என் தலைவனைப் பிரிந்திருந்த காலத்து என்னை நெருப்பாக நின்று சுட்டனை; இன்று இங்கே வந்து அகப்பட்டுக்கொண்டாய்; இனி உன்னை விடுவேனே? இங்கேயே கிடத்தி'' என்று கூறி அக் கள்ளைப்பருகாது அங்கு மற்ருெரு கிண்ணத்தினுல் மூடி வைத்தனள்.

கள்ளுண்ட மற்ருெரு பெண், கையில் பற்றிய கண்ணுடியில் தன் கரிய கண்களின் சிவப்பையும் கொவ்வைக்கனி போன்ற வாயின் வெளுப்பையும் கண்டு, ''என் இன்ப நலத்தைக் கொள்ளை கொண்டு செல்லும் வஞ்சகன் யாவன்?'' என்று கூறி அயலவர் நகைக்கச் சோர்ந்து வீழ்ந்தாள்.

மதுவையுண்டு மயங்கிய வேருெரு பெண், தன் வடிவத்தின் வேறுபாட்டினைக் கண்ணுடியுட் கண்டு, ''இங்கிருப்பது நான்தானே? அல்லது வேறு மகளோ? பிறர் என்னைக் கைப்பற்றி ஓடினரோ? என் உயிர்க் காதலன் இங்கு வந்து என்னைத் தேடினுல் யான் என் செய்வேன்: தோழியே! என்னைத் தேடிக் கண்டுபிடித்துத் தருவாயாக'' என்று வேண்டினுள்.

கள்ளுண்டு களித்த மற்ருெரு பெண், தான் நின்று பார்த்த நிலைக்கண்ணுடியுள் தன் பின்னே மறைந்து நின்ற கணவன் உருவமும் தன்னுருவமும் தோன்றுவதை உருத்து நோக்கி,

''அயலாள் தோளைத் தழுவி இன்பக் கடலுள் மூழ்கி இருக்கின்றனையோ?'' என்று கண்ணீர் வாரச் சினந்து கண்ணாடியை உதைத்தாள்.

18666

ஆடவரும் மகளிரும் இளம் புளிப்பினையுடைய தயிர் கலந்த இனிய சுவை மிக்க சோற்றை விருந்தினரோடும் உண்பார்கள்; வசந்த காலத்திற்குரிய பண்ணுடன் தன் குரலும் பொருந்த யாழை வாசித்துக் காம வேட்கையை எழுப்புவதால் வெண்ணெயால் செய்த பதுமைபோல் உருகித் தளர்வார்கள்.

சண்பகமாறன் தன் தேவியோடு சண்பக வனத்தில் இருத்தல்

இத்தகைய இளவேனிற் காலத்திலே, ஒருநாள் சந்திரகாந்தக் கல்லாகிய செய்குன்றின்கண் கோடை வெப்பத்தைப் போக்கும் பொருட்டுச் சண்பக பாண்டியன், தன் தேவியோடும் சென்று தங்கி இருந்தான். மாந்தளிர் ஈன்று, கோங்கும் முல்லையும் அரும்பி, காந்தளும் செங்கமலமும் ஆம்பலும் குவளையும் சண்பகமும் மலர்ந்து ஒசிந்த மெல்லிய கொடி போன்ற தன் தேவியும் தானுமாகத் தனியிடத்தில் இருக்கும் போது, அவனுக்கு நேரே புதியதொரு நறுமணந் தோன்றும் படி தென்றல் மெல்லென வீசிற்று; சண்பகமாறன் அம்மணத்தை மோந்து ''இஃது ஒரு திவ்விய வாசம்; தென்றல், சோலையில் கவர்ந்த மணம் அன்று; காற்றுக்கும் இயல்பாக மணமில்லை; இம் மணம் எதன்கட் பொருந்திய மணமோ!'' என்று நினைந்து, தன்னுடைய தேவியைத் திரும்பிப் பார்த்தான். அவளுடைய [1]ஐம்பாலுக்குகந்த கூந்தலின் மணமாயிருத்தலைக் கண்டு, ''இம் மணம் வண்டுக்கும் தெரியாது'' என்று எண்ணி வியப்புற்று, ''இம் மணம் கூந்தலுக்குஇயற்கையோ அன்றிச் செயற்கையோ'' என்று ஐயமுற்றான்.

மாறன் பொற்கிழியினைச் சங்க மண்டபத்தின் முன் கட்டுதல்

பிறகு பாண்டியன் அரண்மனை வந்தடைந்து, ''நான் ஐயுற்ற கருத்தினை யாவராயினும் அறிந்து பாடல் செய்வாராயின், அவருக்கே இந்த ஆயிரம் செம்பொன் அடங்கிய முடிப்பு உரியது'' என்று சொல்லி ஒரு பொற்கிழியை ஏவலாளர் கைக் கொடுத்தான். அவர்கள் அதனைப் பெற்றுச் சென்று சங்க மண்டபத்தின் முன்னே கட்டித் தொங்கவிட்

1 ஐம்பால்-முடி, கொண்டை, சுருள், குழல், பனிச்சை என்னும் ஐந்து வகையாக முடிக்கப்படும் கூந்தல்.

டனர். சங்கப் புலவர்களெல்லாம் மரக்கலத்தில் நிறைந்த பொருளின் வகை போல வேறு வேறு வகையாக அமைந்த பொருளால் தம்முள் ஒன்று பட்டு ஆராய்ந்தும், ஒவ்வொருவரும் தனித்தனியே பன்முறை ஆராய்ந்தும் பாண்டியன் உள்ளத்திலே கருதிய பொருளைத் துழாவித் துழாவி அறிய முடியாமல் இளைத்து மனம் வருந்தினர்.

தருமி இறைவனிடம் முறையிடுதல்

அப்பொழுது ஆதிசைவ மரபில் வந்த மாணவ நிலையினனும் தந்தைதாய் இல்லாதவனும், பிரமசாரி நிலையுடையவனும், விவாகத்தில் விருப்புடையவனுமாகிய [1]தருமி என்பவன், பிரமவிட்டுணுக்களால் நாடரிய தேவனும், [2] உருவம் அருவம் அருவுருவம் என்னும் இவற்றைக் கடந்தவனுமாகிய சோமசுந்தரக் கடவுள் திருமுன் சென்று வீழ்ந்து வணங்கி, ''எம்பெருமானே! அடியேன் தந்தை தாய் அற்றவன்; ஒரு பற்றுக்கோடும் இல்லாத சிறியேன்; விவாகத்தில் விருப்புடையேன்; வேதசிவாகமங்களை யெல்லாம் ஓதினவனாயினும் இல்வாழ்க்கையின்றி நின் திருவடியை அருச்சிப்பதற்கு உரியவன் ஆவேனோ! ஆகேன்; ஆதலால், ஐயனே! நீர் யாவற்றையும் அறிவீர்! பாண்டியனுடைய மனக்கருத்தை அறிந்து, எளியேன் உய்திபெற ஒரு செய்யுள் செய்து தந்தருளும்'' என்று விண்ணப்பஞ் செய்தான்.

இறைவன் 'கொங்குதேர்வாழ்க்கை' என்ற பாடலை அளித்தல்

உடனே, ஆலவாய்ப்பெருமானாகிய சோமசுந்தரக் கடவுள்,

''கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற்(று) அரிவை கூந்தலின்
நறியவும் உளவோ நீயறியும் பூவே[3]

---

1 இத் தருமியின் தந்தை பெயர் 'சிவமுனி' என நம்பி திருவிளையாடல் கூறுகின்றது.

2 உருவம்–பிரமன், திருமால், உருத்திரன், மகேசன் என்னும் நான்கு உருவம். அருவம்-விந்து, நாதம், சத்தி சிவம் என்னும் நான்கு அருவம். அருவுருவம்-சதாசிவம் என்னும் அருவுருவம் ஒன்று.

3 இச் செய்யுள் குறுந்தொகையில் சேர்க்கப்பெற்றுள்ளது; நலம் புனைந்துரைத்தல் என்னும் துறை அமைந்தது.

என்னும் தமிழ்ச் செய்யுள் ஒன்றைச் சொல்லழகு நிரம்பப் பாடித் தருமி கையில் தந்தருளினர். அவன், அதனை வணங்கி வைப்புநிதியைப் பெற்றவன் போல வாங்கி மகிழ்ந்து கற்று வல்ல புலவர் இருக்கும் சங்கமண்டபத்தை அடைந்து அங்குள்ள புலவர்கள் கையிலே அப் பாடலைக் கொடுத்தான்.

பாண்டியன் அனுமதிப்படி தருமி பொற்கிழி பெறச்செல்லல்

சங்கப் புலவர்கள் அனைவரும் தருமி கொடுத்த செய்யுளை விரைந்து வாங்கிப் படித்துச் சொல் வளத்தையும் பொருள் வளத்தையும் சீர் தூக்கி, ''நன்று! நன்று!'' என்று மகிழ்ச்சி யடைந்து, பாண்டியன் முன் சென்று அப்பாடலைக் கூறிப் பொருள் விளக்கினர்கள். பாண்டியன் தன் உள்ளக் கருத்துடன் அது முற்றும் ஒத்திருத்தலால், முடியசைத்து மனமகிழ்ந்து ''இப்பொழுதே இச் செய்யுள் கொண்டுவந்த அந்தணன் இப்புலவர்களோடு சென்று ஆயிரம் பொன்னையும் கைக்கொள்ளக் கடவன்'' என்றான்.

பாண்டியன் ஏவலினாலே தருமி புலவர்களோடும் திரும்பிச்சென்று சங்க மண்டபத்தின் முன்னே தொங்கிய பொற்கிழியை அறுக்கும் போது . நக்கீரன் அவனை விரைந்து அணுகி. ''அறுக்காதே; நில்'' என்று தடுத்து, ''இச் செய்யுளிலே குற்றம் இருக்கிறது '' என்றான்.

தருமி மனங்கலங்கி இறைவனிடம் சென்று முறையிடல்

உடனே தமிழ்ப் புலமையில்லாதவனாகிய தருமி, நீண்ட பசியுற்ற ஒருவன் உண் கலத்தில் உணவு பெற்று உண்ணும்போது உண்ணாதே என்று ஒருவன் தடுத்ததுபோல வாடி ஏங்கினான்; மெல்லச் சென்று அச் செய்யுளைச் சோமசுந்தரக் கடவுள் திருமுன் வைத்து, ''கறை மிடற் றண்ணலே! நீர் பிழைபட்ட இப்பாடலைத் தந்தது என்னை? வறுமைப் பிணியினால் வருந்திப் பலநாள் நின்னை வழிபாடு செய்து வரும் அடியேன் இப் பொழுது நின்னிடத்துப் பெறுகின்ற பொருளை இழந்தேன் என்று கூறிற்றிலேன்; எவர்க்கும் மேலாகிய இறைவனே! நீர்பாடியருளிய செய்யுளுக்குச் சில் வாழ்நாட் சிற்றறிவினையுடைய புலவர் குற்றம் கூறினால் நின்னை மதிக்க வல்லவர் யாவர்? எந்தையே! இவ்விகழ்ச்சி நின்னைச் சார்ந்ததல்லது எனக்கு யாதுளது?'' என்று கூறி மனக்கவலையால் வருந்தி நின்று இரங்கினான்.

இறைவன் புலவர் வடிவுகொண்டு சங்க மண்டபம் அடைதல்

அப்பொழுது யாவர்க்கும் பந்தமும் வீடும் வேதமும் அதன்பயனு மான சோமசுந்தரக் கடவுள் ஒருபுலவர் வடிவங்கொண்டு வெளியே

வந்தார். அவர் மகரகண்டிகை, பதக்கம், குண்டலம், மோதிரம் முதலான அணிகளை அணிந்து, விபூதியை நெற்றியிலே திரிபுண்டரமாக முத்தமிழில் வல்லவன் தான் என்பதைக் காட்டும்படி தரித்துத் திருவடியிலே பாதுகை மாட்டிக்கொண்டு, முத்துக்குடை நிழற்ற, வெண்சாமரம் வீச, சட்டையிட்ட இளைஞர்கள் அடப்பை, காளாஞ்சி, பூந்தட்டு முதலியன தாங்கிக் கற்றுச்சொல்லிகள் பின்னேவரச் சங்க மண்டபம் அடைந்தார்.

### இறைவனாகிய புலவர்க்கும் நக்கீரனுக்கும் வாக்குவாதம்

பிறகு, சோமசுந்தரக்கடவுளாகிய புலவர், புலவர் அவையினைச் சார்ந்து அங்கிருந்த புலவர்களை நோக்கி, ''எமது கவிக்குக் குற்றம் கூறினவர் யாவர்?'' என்றார். உடனே நக்கீரன் சிறிதும் அஞ்சாது, ''நானே குற்றங் கூறினேன்'' என்றான். அதனைக் கேட்ட புலவர், ''யாது குற்றம்'' என, நக்கீரன், ''சொற்குற்றமில்லை; வேறு பொருட்குற்றம்'' என்றான். புலவர், ''பொருட்குற்றம் என்னை?'' என்று வினவத் தனக்குக் குற்றம் வருவதை அறியாத நக்கீரன், ''புனைந்த மலர்களின் சார்பினால் அல்லாமல் கூந்தலுக்கு இயற்கையாக மணம் இல்லை'' என்று கூறினான். புலவர், ''[1]பதுமினியுடைய கூந்தலோ?'' என, நக்கீரன் ''அதுவும் அத்தன்மையதே!'' என்றான். புலவர், ''தேவ மகளிரின் கூந்தலோ?'' என, நக்கீரன், ''அதுவும் மந்தார நறுமலர் அணிந்து மணங்கமழும் தன்மையினால் செயற்கை மணமுடையதே!'' என்றான். புலவர், ''நீ துதித்து வழிபட்டு வணங்கும் காளத்தியப்பருடைய சத்தியாகிய ஞானப் பூங்கோதையம்மையாருடைய கூந்தலும் அத்தன்மையதோ?'' என, நக்கீரன் ''அதுவும் அத்தன்மையை உடையதே'' என்று முற்றச் [2]சலஞ்சாதித்தான். உடனே புலவர் நெற்றிக் கண்ணைச் சிறிது காட்ட, நக்கீரன் அதற்கும் அஞ்சாது ''இந்திரன் போல உடம்பு முழுதும் நீர் கண்களை உடையீரானாலும் கூறிய உமது பாடல் குற்றம் குற்றமே!'' என்றான்.

### சிவபெருமானாகிய புலவர் மறைந்தருளல்

அப்பொழுது நக்கீரன் சிவபெருமானது நெற்றிக் கண்ணின் செந்தழல் பற்றிய வெப்பத்தினால் பொறுக்கலாற்றாது பொற்றாமரைப் பொய்கையிலே சென்று விழுந்து அழுந்தினன். புலவர்

---

1. பதுமினி-பதுமினி, சித்தினி, சங்கினி, அத்தினி என்ற நால் வகைப் பெண்களில் ஒருத்தி; உத்தம சாதிப் பெண்.

2. சலம்-பொய், வஞ்சனை. சலஞ்சாதித்தல்-வைரஞ்சாதித்தல்.

வடிவங்கொண்டு வந்தருளிய சோமசுந்தரக் கடவுள் இறைவரெனத் திருவுருக் கரந்தருளினர்.

செய்யுள்—107
ஆகச் செய்யுள்—2539

## 53. கீரனைக் கரையேற்றிய படலம்

### சங்கப் புலவர்களின் மனக்கலக்கம்

சோமசுந்தரக் கடவுளின் நெற்றிக் கண்ணின் அக்கினியினாலே தாக்கப்பெற்ற நக்கீரன் பொற்றாமரைப் பொய்கையுள் வீழ்ந்து துன்பக் கடலுள் மூழ்கி வருந்தக் கபில பாணர் முதலாய மற்றைய புலவர்களெல்லாம் அதனைக் கண்டு பொறாது நடுங்கினார்கள். "நக்கீரன் இல்லாது பிற புலவர் கூடிய இச்சங்கம், அரசன் இல்லாத குடியும், நடுநாயகமணி இல்லாத கண்டிகையும், மெய்யுணர்வு (ஞானம்) இல்லாதவர் கல்வியும் போன்றது; ஐயையோ! திருவாலவாயின்கண் வீற்றிருக்கும் சொற்பொருள் வடிவாயுள்ள சோமசுந்தரக் கடவுளுடன் வாதுசெய்த இப் பிழையோ மிகப் பெரியது; ஆதலின், இது தீர்வது எப்படி? இனி உய்வது அரிதரிது" என்று யாவரும் சிந்தித்து மனம் கலங்கினர்.

### புலவர்கள் சிவபெருமானையடைந்து துதித்துவேண்டுதல்

பிறகு புலவர்கள், "சிவபெருமான், தமது திருக்கயிலாய மலையைப் பெயர்த்த இராவணனும் தன் கையிலே வீணைகொண்டு இனிய இசைபாடத் திருவுளங் கனிந்து அவன் செய்த பிழையைப் பொறுத்தருளியதுமன்றி அவனுக்குத் திண்ணிய தேரும் வலிய வாளும் கொடுத்தருளினரன்றே! இப் பெரும் பிழையை யாவரானும் நீக்குதல் அரிது. யாவருக்கும் தேவராகிய அச் சிவபெருமானே திருவுளம் திரும்பினுல் இப் பிழை நீங்குவது உறுதியே" என்று தங்களுக்குள்ளே சொல்லிக்கொண்டுபோய்ச் சோமசுந்தரக் கடவுளின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி,

திருத்த னே!சர ணஞ்சர ணம்;மறைச் சென்னிமேல்
நிருத்த னே!சர ணஞ்சர ணம்;நிறை வேதநூல்
அருத்த னே!சர ணஞ்சர ணம்;திரு வாலவாய்
ஒருத்த னே!சர ணஞ்சர ணங்கள் உனக்குநாம்.

என்று துதித்து, "திருமாலாகிய இடபத்தின்மேல் எழுந்தருளி அடியார்க்கு அருள விரைந்து வருபவனே! எவ்வுயிர்க்கும் அன்னையும் அத்தனுமான நினது தண்ணிய அருளே, தாமரை மலருக்குச் சூரியன் மலர்தலையும் வாடுதலையும் செய்தல் போல, நன்மைகளையும், தீமைகளையும் செய்தார்க்கு இன்பத்தையும் துன்பத்தையும்

கொடுப்பதாகும். [1]ஆகையால், அத்தனே! நக்கீரன் கல்விச்செருக்கினால் அறிவழிந்து உமதுபாடலைப் பிழை என்ற [2]விதண்டையினாலே நீர் நெற்றிக் கண்ணைத் திறந்து அதன் வெம்மையால் அவன் பொற்றாமரை வாவியில் வீழுமாறு செய்தீர்; இனிப் பெருங்கருணை கூர்ந்து இப்பிழையைப் பொறுத்தருளும்'' என்று குறையிரந்து வேண்டினர்.

## இறைவன் நக்கீரன் கையைப் பிடித்துக் கரையேற்றல்

அப்பொழுது சோமசுந்தரக் கடவுள் மீனாட்சியம்மையாரோடு எழுந்தருளிவந்து, நக்கீரன் அழுந்திக் கிடந்த பொற்றாமரைப் பொய்கைக் கரையின் அருகு அடைந்து புலவர் கூட்டத்துள்ளே நின்றுகொண்டு, முன்னர் அழற்கண்ணால் நோக்கியவர் அருட் கண்ணினாலே நோக்கியருளினார். உடனே நீரினுள் மூழ்கிக் கிடந்த நக்கீரன், தன்னுடைய பொறி புலன் கரணமெல்லாம் சிவபெருமானுடையனவேயாக, அவரது பெரிய கருணைக் கடலில் ஆழ்ந்து அழிதலில்லாத அன்பு வடிவமானான்; உலக மாதாவாகிய ஞானப் பூங்கோதையம்மையாரின் கூந்தலுக்குப் பழுது சொல்லிய கொடிய நாவின் குற்றத்தை அவ்விறைவர் பொறுப்பரே அன்றி வேறு யாவர் பொறுப்பர்! என்று கருதித் திருக்காளத்தியப்பர்மீது நேரிசை வெண்பாவினால் 'கைலை பாதி காளத்தி பாதி யந்தாதி,[3] என்னும் பாமாலையைத் தொடுத்துச் சாத்தினான். அடியார்கட்குத் திருவடியாகிய புணையை அருளி எழுவகைப் பிறவியாகிய கொடிய கடலினின்றும் வீடு என்னும் கரையில் ஏற்றவல்ல அவ்விறைவன், அந்த அந்தாதியைத் திருச்செவி மடுத்து நேர்வந்து அணுகி அந் நக்கீரனுடைய கையைப் பிடித்துக் கரையின்கண் ஏற்றியருளினார்.

---

1. இங்கே, ''தந்தை தாய்பெற்ற தத்தம் புதல்வர்கள் தஞ்சொல் ஆற்றின், வந்திடா விடினுறுக்கி வளாரினால் அடித்துத் தீய, பந்தமும் இடுவர் எல்லாம் பார்த்திடின் பரிவே ஆகும், இந்த நீர் முறைமை யன்றோ ஈசனார் முனிவும் என்றும்'' என வரும் சிவஞான சித்தியார் பாடல் சிந்திக்கற் பாலது.

2. விதண்டை-வாதத்தில் வெல்லும் வேட்கையுடையார் தமது பக்கத்தைத் தாபித்தலின்றிப் பிறர் பக்கத்தை இகழ்தல் மாத்திரமான கதை.

3. கைலைபாதி காளத்திபாதி யந்தாதி-இஃது ஒரு பாட்டில் கயிலைமலையின் சிறப்பும் அடுத்த பாட்டில் காளத்தி மலையின் சிறப்பும் மாறிமாறி அமையப் பாடிய பிரபந்தம்; நூறு வெண்பாக்களைக் கொண்டது,